பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ்நகரில் சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[கி-2127)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆவணி 06 புதன்கிழமை (22-08-2001) தொலைபேசி: 3378 ஒலி :254

## நூற்றுக்கணக்கான பொலிஸார் சிதறி ஓட

# அம்பாறைப் பொலிஸ் முகாம் மீது புலிகள் பெரும் அதிரடித் தாக்குதல்!

### 25 பொலிஸார் பலி; 18 பேர் காயம்

(நமது நிருபர்)

அம்பாறை மத்திய பொலிஸ் நிலைய முகாம் மீது நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட 15 நிமிடநேர அதிரடித்தாக்குதலில் 25க்கு மேற்பட்ட பொலிஸார் கொல்லப்பட்டுள்ளனர்.

இதில் நான்கு பொலிஸாரின் உடல்களையும் முகாமிலிருந்த ஆயுதங்களையும் தாம் கைப்பற்றியதாகவும் இத்தாக்குதலில் தமது தரப்பில் இருவர் உயிரிழந்துள்ளதாகவும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

1997 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி அம்பாறை மத்தியபொலிஸ் முகாமில் வைத்து கோணேஸ்வரி என்ற இளம் பெண் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பின்கிரனைட் வெடிக்க வைத்து கொல்லப்பட்ட 4-வது ஆண்டுநிறைவை ஒட்டி இத் தாக்குதல் நடத்தப்பட்டதாக புலிகளின் குரல் வானொலி நேற்றிரவு அறிவித்துள்ளது.

இத் தாக்குதலின் போது அம்பாறை மத்திய பொலிஸ் நிலையமும் அதனோடு இணைந்த 2 மினிமுகாம்களும் தாக்கி அழிக்கப்பட்டுள்ளது. இதன் போது 25 க்கு மேற்பட்ட பொலிஸார் கொல்லப்பட்டும் 18 க்கு மேற்பட்ட பொலிஸார் காயமடைந்துமுள்ளனர்.

இத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக விடுதலைப்புலிகள் விடுத்த அறிவிப்பின்படி, நேற்று முன்தினம் நள்ளிரவு இடம்பெற்ற 15 நிமிட அதிரடித் தாக்குதலின் போது முகாம் முற்றாகப் புலிகள்வசம் வீழ்ந்ததாகவும் முகாமில் நிலைகொண்ட விடுதலைப்புலிகள் அங்குதரித்துநின்ற 10க்கு மேற்பட்ட வாகனங்களைத் தீக்கிரையாக்கியதுடன் ஆயுத தளபாடங்களையும் நான்கு பொலிஸாரின் சடலங்களை

→ 8ஆம் பக்கம் பார்க்க

### புலிகள் தரப்பில் இருவர் உயிரிழப்பு

(மட்டக்களப்பு)

நேற்று முன்தினம் அம்பாறை மத்திய பொலிஸ் நிலையம் மீது விடுதலைப்புலிகள் மேற் கொண்டதாக்குதலில்

★ மேஜர் கோகுலன் [நாகராஜா நவநீதன் அம்பாறை மாவட்டம்]

★ வீரவேங்கை பவித்திரன் [கோகுலநாயகம் கபிலாசன் அம்பாறைமாவட்டம்]

ஆகிய இரு போராளிகள் களப்பலியாகியதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர் (ந-4)

## இராஜினாமா கடிதங்களை ஏற்கப் போவதில்லை

### ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

அமைச்சர்களும், பிரதியமைச்சர்களும் ராஜினாமா கடிதங்களை ஒப்படைக்க முன்வந்த போதும் அவற்றை தாம் ஏற்கப் போவதில்லை என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கலந்து கொண்ட கூட்டத்தில் உரையாற்றும்போதே மேற்சண்டவாறு ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், நாடுதற்போது எதிர் நோக்கியுள்ள பல்வேறு ...

## பெருமளவு ஆயுதங்களை புலிகள் கைப்பற்றினர்

(அம்பாறை)

அம்பாறைமத்திய பொலிஸ் முகாம் விடுதலைப் புலிகளினால் முற்றாக தாக்கி அழிக்கப்பட்டு முகாமிலிருந்த பெருந்தொகையான ஆயுதங்கள் புலிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளதாக புலிகளின் குரல் வானொலி நேற்றிரவு அறிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் விபரம் வருமாறு;

60 மில்லி மீற்றர் மோட்டார் → 3

→ 8ஆம் பக்கம் பார்க்க

## 20 எம்.பிக்கள் என்னுடன் வெளியேறுவார்கள்

### அமைச்சர் திஸநாயக்கா

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைவிட்டு தன்னை வெளியேற்றினால் ஒன்பது முதல் இருபது வரையான பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சியைவிட்டு வெளியேறுவார்களென சமுர்த்தி விவகார அமைச்சர் எஸ். பி. திஸாநாயக்கா தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட நிதியை தனியார் வங்கி ஒன்றில் வைப்பிலிட்டமை தொடர்பாக ஜனாதிபதிக்கும் திஸாநாயக்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## பிரதமரின் அழைப்பை ரணில் ஏற்றுக்கொண்டார்

### ஆராய்வுக் கூட்டம் இன்று

(கொழும்பு)

தேசிய நல்லிணக்க அரசு அமைப்பது தொடர்பாக பிரதமர் ரட்ணசிறிவிக்கிரமநாயக்கா எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்காவிற்குவிடுத்த அழைப்பை ரணில் ஏற்றுக்கொண்டுள்ளார்;

இது தொடர்பாக ஆராய்வதற்கு இன்று பி:பகல்3 மணிக்குஎதிர்க்கட்சிகளின் தலைவர்கள் அடங்கிய கூட்டமொன்றை ரணில் விக்கிரமசிங்கா கூட்டவுள்ளார்.

→ 8ஆம் பக்கம் பார்க்க

## ஏற்கப் போவதில்லை ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

அமைச்சர்களும், பிரதியமைச்சர்களும் ராஜினாமா கடிதங்களை ஒப்படைக்க முன்வந்த போதும்அவற்றை தாம் ஏற்கப் போவதில்லை என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்புமாவட்ட சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் உரையாற்றும்போதே மேற்சண்டவாறு ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், நாடுதற்போது எதிர் நோக்கியுள்ள பல்வேறு நெருக்கடிகளில் இருந்து விடு படுவதற்கான பல்வேறு மாற்று வழிகள் பற்றி ஆராய்ந்து வருகின்றோம் என்றும் கூறினார்;

## சகலகட்சிகளும் இணைந்து அரசுஅமைப்பது அவசியம்

(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவும் அரசியல் நெருக்கடிக்கு முடிவு கட்டப்பட வேண்டுமானால் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடம் இருக்கும் அதிகாரம் சகல கட்சிகளுக்கும் பகிரப்பட்டு அவை ஒன்றிணைந்து அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டுமென எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்

கடந்த திங்கட் கிழமை நடைபெற்ற வர்த்தகக் கைத்தொழில்சார் நிபுணர்களின் கூட்ட மொன்றில் உரையாற்றும்போதே ரணில்மேற்கண்டவாறுகூறினார்.

→ 8ஆம் பக்கம் பார்க்க

லை

★ மேஜர் கோகுலன் [நாகராஜா நவநீதன் அம்பாறை மாவட்டம்]

★ வீரவேங்கை பவித்திரன் [கோகுலநாயகம் கபிலாசன் அம்பாறைமாவட்டம்]

ஆகிய இரு போராளிகள் களப்பலியாகியதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர் (ந- 4)

## ஆராய்வுக் கூட்டம் இன்று

(கொழும்பு)

தேசிய நல்லிணக்க அரசு அமைப்பதுதொடர்பாக பிரதமர் ரட்ணசிறிவிக்கிரமநாயக்கா எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்காவிற்குவிடுத்த அழைப்பை ரணில் ஏற்றுக்கொண்டுள்ளார்;

இது தொடர்பாக ஆராய்வதற்கு இன்று பி:பகல்3 மணிக்குஎதிர்க்கட்சிகளின் தலைவர்கள்அடங்கிய கூட்டமொன்றை ரணில் விக்கிரமசிங்கா கூட்டவுள்ளார்;

→ 8ஆம் பக்கம் பார்க்க

## வறுமை காரணமாகவே சிங்கள இளைஞர்கள் படையில் சேர்கின்றனர்

### சு. ப. தமிழ்ச்செல்வன் கூறினாராம்

(கொழும்பு)

வறுமைகாரணமாகவே சிங்களப்பிள்ளைகள் படையில் சேர்கின்றனர். சிங்கள மக்களுக்கு எதிராக நாம் போராடவில்லை சுயநலவாத அரசியல்வாதிகளின் நிர்ப்பந்தம் காரணமாகவே நாம் யுத்தம் செய்கிறோம்;

தமகிக்டையே புரிந்துணர்வுடன் செயற்படமுடியாத தென்னிலங்கை அரசியல்வாதிகள் மாற்று மொழிபேசும் தமிழர்களான எம்முடன் புரிந்துணர்வுடன் செயற்படுவார்களா என்பது சந்தேகமே என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு ப.தமிழ்ச்செல்வன் தம்மிடம் தெரிவித்ததாக ஏ.பி.நாணயக்கார தெரிவித்துள்ளார்.

வன்னியில் இடம்பெற்ற சு.ப தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பின பின் பத்திரிகையாளர் மகாநாடு ஒன்றை காணாமல்போன படையினரின் பெற்றோர் சங்கத் தலைவர் ஞ.பி.நாணயக்கார நடத்தியிருந்தார்.

→8ஆம் பக்கம் பார்க்க

# தேசிய நல்லிணக்க அரசை அமைக்க வருமாறு எதிர்க்கட்சித் தலைவருக்கு பிரதமர் அழைப்பு!

(கொழும்பு)

தேசிய நல்லிணக்க அரசு ஒன்றை அமைப்பதுதொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்தவருமாறு உத்தியோகபூர்வமாக அழைப்பொன்றை பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவிற்கு அனுப்பிவைத்துள்ளார்

தேசிய நல்லிணக்க அரசு அமைப்பது தொடர்பாக நேற்று மாலை பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க ரணில் விக்கிரமசிங்காவிற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில்,

தேசிய நல்லிணக்க அரசு அமைப்பதற்கான கருத்தொற்றுமையை ஏற்படுத்த பேச்சுவார்த்தை அவசியமாகும்; இதேபோல் இனப்பிரச்சினைக்கும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணப்படும் போது ஆயுதப்போராட்டத்திற்கும் முற்றுப்புள்ளி வைக்க முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தனதுயோசனையை ரணில்ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் கருத்தொற்றுமை மிக்க பேச்சுவார்த்தையை திகதி குறித்து ஆரம்பிக்கலாம் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்; (வ

## கொழும்பில் மறியல் போராட்டம்

(கொழும்பு)

கடந்த ஞாயிற்றுக் கிழமை சீதுவையில் இடம்பெற்ற விமானவிபத்து சம்பந்தமான செய்திகளை சேகரிக்க சென்ற ஏ எவ்.பி செய்தியாளர் ஒருவர் விமானப் படையினரால் தாக்கப்பட்டதை கண்டித்து நேற்றுமறியல் போராட்டம் ஒன்றை சுதந்திர இயக்கம் கொழும்பில் நடத்தியுள்ளது;

→ 8ஆம் பக்கம் பார்க்க

# சிறு விளம்பரம்


## விற்பனைக்கு

திருஞான சம்பந்தர் தேவாரம், திருவாதவூரடிகள் புராணம், திருவாசகம், திருக்குறள், நற் சிந்தனை, நல்லைக்குமரன் மலர், நூல்கள் இருக்கின்றன. தொடர்பு 135-சிவன்கோவில் முன்பாக நல்லூர், யாழ்ப்பாணம்: நேரம் மாலை 2.00-7.00 வரை (3484)

## (O.L) கணிதம்

புதிய, பழைய திட்டத்திற்கமைய, கணித பாடத்தின் பெரும் பிரிவுகளான அட்சர கணிதம், கேத்திர கணிதம், எண்கணிதம், புதிய கணிதம் ஆகியவற்றின் சகல அலகுகளையும் ஆரம்ப அறிவியலிலிருந்து 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். தொடர்பு: க. ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (3486)


## கலைநிலா

### அரங்க நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். திருமறைக் கலாமன்றத்தால் மாதந்தோறும் நடத்தப்படும் கலைநிலா அரங்க நிகழ்வுகள் எதிர்வரும் 26ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணி முதல் மன்ற அரங்கில் இடம் பெறவுள்ளது.

இசை, நடனம் என்பவற்றுடன் விசேட நிகழ்வாக கூத்தும் இடம்பெறும். ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொள்ள முடியும் என மன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார். (செ-104)


ஊடகவியலாளர்

மயில்வாகனம் நிமலராஜன் ஞாபகார்த்த

## ஓராம் ஆண்டு நினைவுதினப்போட்டிகள்

குருஷேத்திர மையத்திலிருந்து தன்னின மக்களின் உரிமைக்காக தனது பேனாவை ஆயுதமாக்கி உறுதியாகக் குரல் கொடுத்தவனும் எழுத்து, பேச்சு, ஊடகம் ஆகியவைகளின் சுதந்திர உரிமையாளனுமான ஊடகவியலாளன் மயில்வாகனம் நிமலராஜன் ஓராம் ஆண்டு நினைவாக இப்போட்டிகள் நடத்தப்படுகின்றன.

★ வயதுக்கட்டுப்பாடுகள் எதுவுமின்றி எவரும் பங்கெடுத்துக்கொள்ளலாம்.

★ மாணவர்களாயின் கல்வி கற்கும் வகுப்பு, பாடசாலை தொடர்பான விபரங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

★ போட்டிகளுக்கான முடிவுத் திகதி: 19.09.2001

★ கட்டுரைகள் தட்டச்சுத்தாளின் 4 பக்கங்களுக்கு மேற்படாமலும், கவிதைகள் தட்டச்சுத்தாளின் ஒரு பக்கத்திற்கு மேற்படாமலும் இருத்தல் நன்று.

★ ஆக்கங்கள் சாதாரண தபால் மூலம்.

'நிமலராஜன் ஞாபகார்த்த அமைப்பு'
இல:19, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

★ கட்டுரைக்கான தலைப்புகள்:

01) தனி மனித சுதந்திரமும், சமூக சுதந்திரமும்
02) யாழ் குடாநாடு ...
ஊடகங்களின் பங்களிப்பு
03) சமூக விடுதலையில் ஊடகவியலாளர்களின்பங்கு

★ கவிதைக்கான தலைப்பு:

யுத்தமும் நானும் ...

நிமலராஜன் ஞாபகார்த்த அமைப்பு

(C-2414)


# கலையம்சம் அழிந்து வருகிறது என்று கவலையுற்றிருந்த எமக்கு கேக் கண்காட்சி சற்று ஆறுதலளிக்கிறது

### பரிசளிப்பு விழாவில் முன்னாள் நீதிபதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்த மண்ணில் கலையம்சம் அழிந்து போகிறது. தினசரி இந்த மண்ணை விட்டு கலையார்வம் மிக்கவர்களும் புத்திஜீவிகளும் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள் என்று ஏக்கமுற்றிருந்த எமக்கு சற்று ஆறுதல் ஏற்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணம் யோகிஹோம் சயன்ஸ் அக்கடமியில் இம்மாதம் 15 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை நடைபெற்ற கேக், மாச்சினி அலங்காரக் கண்காட்சியின் பரிசளிப்பு விழாவிற்கு தலைமைதாங்கிய ஓய்வுபெற்றநீதிபதி மு. திருநாவுக்கரசு பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

இப்படியும் செய்ய இயலுமா? என்று வியக்கும் வகையில் கலைநுணுக்கங்கள் இக்கண்காட்சியில் வெளிக்கொணரப்பட்டுள்ளன.

ஆயகலைகள் 64 என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் கேக் என்றொரு கலை இல்லாவிட்டாலும் அதுவும் சமையல் கலையில் உள்ளடங்கியுள்ளது.

ஓர் ஓவியன் தன் மனதில் தோன்றும் கற்பனையை எவ்வாறு ஓவியமாக வரைவானோ அதேபோல் இந்த நிறுவனத்தின் பொறுப்பாசிரியை தனது எண்ணக்கிடக்கையை தன் மாணவிகளைக்கொண்டு உருவாக்கியிருக்கிறார்.

பணத்திற்காக அன்றி சேவை நோக்கில் செயற்படும் இந் நிறுவனம் உண்மையில் பாராட்டுதற்கு உரியது என்றார்.

இந்நிகழ்வில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி க.பொன்னம்பலமும் உரையாற்றினார்.

கண்காட்சியில் பங்குகொண்டு பரிசு பெற்றவர்களுக்கான வெற்றிக்கிண்ணங்களையும், பாராட்டுப்பத்திரங்களையும் யாழ் பல்கலைக்கழக நுண்கலைப்பீட சிரேஷ்ட நடன விரிவுரையாளர் திருமதி கிருஷாந்தி ரவீந்திரன் வழங்கினார். (உ)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஆகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி, வெளிமாவட்டங்களுக்குப்பயணம் செய்ய அனுமதிவழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றன.

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 201329 ஏ | 201329 பி |
| 201329 சி | |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 199698 ஏ | 199699 ஏ |
| 191132 ஏ | 191132 பி |
| 200020 ஏ | 200020 பி |
| 204872 ஏ | 204890 ஏ |
| 204890 பி | 204890 சி |
| 204927 ஏ | 205161 ஏ |
| 205161 பி | 205261 ஏ |
| 205261 பி | 205261 சி |
| 205261 டி | 206229 ஏ |
| 206229 பி | 206229 சி |
| 206229 டி | 206254 ஏ |
| 206310 ஏ | 206331 ஏ |
| 206331 பி | 206331 சி |
| 206344 ஏ | 206354 ஏ |
| 206392 ஏ | 206392 பி |
| 206392 சி | 206412 ஏ |
| 206444 ஏ | 206444 பி |
| 206510 ஏ | 206510 பி |
| 206510 சி | 206572 ஏ |
| 206572 பி | 206572 சி |
| 206572 டி | 206572 ஈ |
| 206572எவ் | 206572ஜி |
| 206572 எச் | 206572ஐ |
| 206573 ஏ | 206573 பி |
| 206573 சி | 206573 டி |
| 206573 ஈ | 206573எவ் |
| 206576 ஏ | 206611 ஏ |
| 206612 ஏ | 206630 ஏ |
| 207218 ஏ | 207210 பி |
| 208384 ஏ | |

### கரவெட்டி

| |
|---|
| 188096 ஏ |

### கோப்பாய்

| | |
|---|---|
| 136401 ஏ | 136401 பி |
| 187784 ஏ | 1990 2 ஏ |
| 199002 பி | 199002 சி |
| 199011 ஏ | 199034 ஏ |
| 199057 ஏ | 199057 பி |
| 199058 ஏ | 199059 ஏ |
| 199081 ஏ | 199154 ஏ |
| 199154 பி | 199199 ஏ |
| 199199 பி | 201398 சி |
| 201398 பி | 201398 ஏ |
| 203252 ஏ | 203252 பி |
| 204521 ஏ | 204521 பி |
| 204572 ஏ | 204596 ஏ |
| 204596 பி | 204596 சி |
| 204596 டி | 204707 ஏ |
| 204769 ஏ | 204772 ஏ |
| 204773 ஏ | 207485 ஏ |
| 207492 ஏ | 207495 ஏ |
| 207495 பி | |

### நல்லூர்

| | |
|---|---|
| 187535 ஏ | 187536 ஏ |
| 287537 ஏ | 287538 ஏ |
| 187540 ஏ | 187672 ஏ |
| 187673 ஏ | 187690 ஏ |
| 187693 ஏ | 187699 ஏ |
| 187767 ஏ | 187771 ஏ |
| 187775 ஏ | 187779 ஏ |
| 187783 ஏ | 187785 ஏ |
| 187818 ஏ | 187835 ஏ |
| 187846 ஏ | 187852 ஏ |
| 187888 ஏ | 188056 ஏ |
| 188057 ஏ | 188086 ஏ |
| 199690 ஏ | 199713 ஏ |
| 199714 ஏ | 199784 ஏ |
| 200467 ஏ | 200483 ஏ |
| 200484 ஏ | 200522 ஏ |
| 200547 ஏ | 200553 ஏ |
| 200560 ஏ | 201569 பி |
| 201396 ஏ | 201396 பி |
| 204529 ஏ | 204529 பி |
| 204615 ஏ | 204767 ஏ |
| 204767 பி | 206230 ஏ |
| 206610 ஏ | 206627 ஏ |
| 206628 ஏ | 206629 ஏ |
| 206682 ஏ | 20668[illegible] பி |
| 207217 ஏ | 207217 பி |
| 207217 சி | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 170878 ஏ | 1200542 ஏ |

### தெல்லிப்பளை

| |
|---|
| 199178 ஏ |

### உடுவில்

| | |
|---|---|
| 170892 ஏ | 170894 ஏ |
| 170895 ஏ | 170896 ஏ |
| 170893 ஏ | 187681 ஏ |
| 108080 ஏ | 199722 ஏ |
| 199723 ஏ | 199724 ஏ |
| 199725 ஏ | 199726 ஏ |
| 199727 ஏ | 199728 ஏ |
| 199729 ஏ | 199730 ஏ |
| 199731 ஏ | 199732 ஏ |
| 199733 ஏ | 199735 ஏ |
| 199736 ஏ | 199737 ஏ |
| 199738 ஏ | 199739 ஏ |
| 190748 ஏ | 200501 ஏ |
| 201374 ஏ | 204628 ஏ |
| 204714 ஏ | 204714 பி |

## விசேட பஜனை

(யாழ்ப்பாணம்)

யாழ் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் இன்று மாலை3 30க்கு ஆவணிச் சதுர்த்தியை ஒட்டிய விசேட பஜனை இடம் பெறும். (செ-104)

## சுத்திகரிப்பு தொழிலாளர் பற்றாக்குறை

(உடுவில்)

வலி தெற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட சுன்னாகம், உடுவில் உப அலுவலகங்களில் சுத்திகரிப்பு தொழிலாளர் பற்றாக்குறை நிலவுகின்றது.

அங்கு கடமைபுரியும் தொழிலாளர் லீவு எடுக்கும் பட்சத்தில் பதில் தொழிலாளர் கடமைக்கு ஈடுபடுத்தப்படாமையால் சிலவேளைகளில் கழிவு நீர் வாய்க்கால்கள் இரண்டு, மூன்று நாட்களுக்கு சுத்திகரிக்கப்படாது துர்நாற்றம் வீசுவதாகவும் இதனால் பல தொற்று நோய்கள் ஏற்பட ஏதுவாக இருப்பதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (உ-129)

## விசேட கருமபீடம்

(ஏழாலை)

இலங்கை வங்கியின் 62 வருட சேவை நிறைவையொட்டி தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலய மஹோற்சவ காலத்தில் ஆலய முன்றலில் இலங்கை வங்கியின் காங்கேசன்துறை கிளையின் விசேட கருமபீடம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இக் கரும பீடம் எதிர்வரும் 31ஆம்திகதி வரை செயற்படவுள்ளது. (உ-12)

# மோட்டார் சைக்கிள் மினிபஸ் விபத்தில் ஒருவர் மரணம்

## அச்சுவேலியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலிப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் மினிபஸ் விபத்தில் ஒருவர் பலியானார்.

மோட்டார் சைக்கிளை ஓட்டிச்சென்ற வளலாய் கிழக்கு, அச்சுவேலியைச் சேர்ந்த குமாரு சன்னதிநாதன் (வயது35) என்பவரே இவ்வாறு மரணமானார்.

இவரது சடலம் மரண விசாரணையின் பொருட்டு யாழ் போதனா வைத்திய சாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (உ-104)

### கட்டுநாயக்கா விமானத்தள தாக்குதல்

# விரிவான அறிக்கை அடுத்த வாரம்

## அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

கட்டு நாயக்கா விமானத்தளத் தாக்குதல் குறித்த விரிவான அறிக்கை இவ் வாரம் அல்லது அடுத்த வாரம் விமானப்படைத்தளபதியிடம் கையளிக்கப்படவுள்ளது.

மேற்கண்ட தகவலை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஐந்து அல்லது ஆறு பேர் கொண்ட குழுவே மேற்படி அறிக்கையைத் தயாரித்துள்ளதாகவும் தற்போது அது பூர்த்தியாகி விட்டதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்கா விமானத்தள தாக்குதலின் போது யுத்த விமானங்கள் உட்பட எட்டு விமானங்கள் சேதமடைந்ததாகவும், அதனால் 230 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டதாகவும் அரசு

தரப்பில் தெரிவிக்கப்பட்ள்ளது. க]

## அவசர வேண்டுகோள்

(கோப்பாய்)

க. பொ. த (உயர்தர) பரீட்சை மீண்டும் எதிர்வரும் 27 ஆம் திகதி ஆரம்பமாவதையொட்டி முதல் நாள் 26 ஆம் திகதி காலை 9 00 மணியளவில் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர்கள் அலுவலகப் பணியாளர் ஆகியோரை தவறாது தத்தமது இணைப்பு நிலையங்களுக்கு வருகை தருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இணைப்பாளர்களைச் சந்தித்து தத்தமக்குதேவையான உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளும்படியும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-79)

# சமய நிகழ்ச்சிகள்

## வருடாந்த மஹோற்சவம்

(உடுவில்)

சங்குவேலி ஸ்ரீ சிவஞான விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் வரும் வெள்ளிக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து ஒன்பது தினங்கள் திருவிழா நடைபெற்று அடுத்த மாதம் 1ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 2ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

(செ-129)

★ ★ ★

(உடுவில்)

ஆனைக்கோட்டை வரத விக்ன விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் வரும் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து ஒன்பது தினங்கள் திருவிழா நடைபெற்று அடுத்த மாதம் 1ஆம் திகதி இரதோற்சவமும், 2 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.

(செ-129)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோறசவம் வரும் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து ஒன்பது தினங்கள் திருவிழா நடைபெற்று அடுத்த மாதம் 1ஆம் திகதி இரதோற்சவமும், 2ஆம்திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.

(செ)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவம் வரும் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து ஏழாம் நாள் மாம்பழத் திருவிழாவும், ஒன்பதாம் நாள் தேர்த்திருவிழாவும், பத்தாம் நாள் தீர்த்தத் திருவிழாவும், பதினொராம் நாள் திருக்கல்யாணமும் நடைபெறும்.

(செ)

## சதுர்த்தி உற்சவம்

(மந்திகை)

அல்வாய் கும்முழடி பிள்ளையார் ஆலயத்தில் இன்று காலை 8.00 மணிக்கு சதுர்த்தி உற்சவம் நடைபெறவுள்ளது.

மதியம் அன்னதானமும், இரவு 8.00 மணிக்கு "கோவ

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து தினங்களுக்கு நடைபெறவுள்ளது.

(செ)

## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

அல்வாய் வடக்கு மாணிக்கம் பற்றை பூதவராயர் (மாணிக்க விநாயகர்) ஆலய குப்பாபிஷேகதின சங்காபிஷேகம் இன்று நடைபெறவுள்ளது.

(செ)

## மகாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை புளியங்கண்டு பிள்ளையார் ஆலய மகாகும்பாபிஷேகம் வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 12 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று இறுதி நாள் காலை 108 சங்காபிஷேகமும் மாலை 5,00 மணிக்கு உற்சவமும் நடைபெறும்.

(செ)

## மணவாளக் கோலவிழா

(மந்திகை)

மாலுசந்தி ஸ்ரீகாமாட்சி அம்மன் ஆலய மணவாளக் கோலவிழாஇன்றுகாலை8.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

(செ-23)

## மஹாகணபதி ஹோமம்

(யாழ்ப்பாணம்)

உடுவில் ஸ்ரீ சொர்ணசித்தி டஞ்சமுக வநாயகர் ஆலயத்தில இன்று விசேட மஹா கணபதி ஹோமம் நடைபெறவுள்ளது.

காலை 7.00 மணிக்கு கணபதி ஹோமமும் 9.30 மணிக்கு கும்பாபிஷேகமும், மதியம்12.00 மணிக்குஅன்னதானமும், பி.ப. 2.00 மணிக்கு வசந்த மண்டப பூஜையும், பி. ப. 2. 30 மணிக்கு திருவூஞ்சல் நிகழ்வுகளும் நடைபெற்று பி.ப 3.30 மணிக்கு விநாயகப் பெருமான் வெளிவீதி உலா வரும் நிகழ்வும்பெறும்.

# தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினைக்கு தீர்வுகாண அரசியல் உரிமைகளைநிலைநாட்ட வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் பேட்டியில் தெரிவிப்பு

(கொழும்பு)

திருவிழாவுக்கு கடை விரிக்கும் பெட்டிக் கடைக்காரர்கள் போல தேர்தல் திருவிழாவுக்காக கிளை திறக்கும் பம்மாத்து அரசியல் எமக்கு உடன்பாடானது அல்ல, எனவே தான் யாழ். குடா நாட்டில் தங்கியிருந்து பணி புரிகின்றேன்.

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத் தாபனத்துக்கு வழங்கிய பேட்டியொன்றில், யாழ்ப்பாணத்திலேயே தங்கியிருந்து பணியாற்றுவதன் நோக்கம் பற்றிய கேள்விக்கு பதிலளிக்கையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர்தொடர்ந்துகூறுகையில்;

ஒரு தனிமனிதனுக்கு பசியும், தாகமும் எவ்வாறு ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்த இரு வெவ்வேறு பிரச்சினைகளாக இருக்கின்றனவோ அதே போலவே எமது இனத்திற்கு அபிவிருத்தியும், அரசியல் உரிமையும் ஒன்றுடனொன்று பிணைந்த இரு வெவ்வேறு பிரச்சினைகளாகும்.

அன்றாடப் பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுவது அவசியம். அடிப்படைப் பிரச்சினைக்கு தீர்வு காண அரசியல் உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டும்.

ஒன்றுக்காக மற்றையதைப் பின் தள்ளுவதோ, ஒத்திப் போடுவதோ தேவையற்றது. இரண்டையும் சம காலத்தில் முன்னெடுக்கும்போக்கிலேயே ஈ.பி.டி.பி. யினராகிய நாங்கள் செயற்பட்டு வருகின்றோம்.

அதே வேளை மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்னும் எங்கள் அரசியல்இலக்கைமுன்வைத்து எக்காலமும் பிரிக்கப்படாத வடக்கு-கிழக்கு மாநிலத்திற்கு விசேட அதிகாரங்கள் வழங்கப்படுவதன் மூலம் ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சுகவாழ்வு என்பதை நடைமுறைச் சாத்தியமான மாற்று வழியில் நிலைநாட்டப் பாடுபட்டு வருகின்றோம் என்றார்.

(உ)

# குடாநாட்டில் கடந்த 8 மாதங்களில் 59 பேர் மிதிவெடியில் சிக்கினர்

## ஒருவர் உயிரிழப்பு, 40 பேர் காலிழப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த ஜனவரி மாதம் தொடக்கம இற்றை வரை யாழ் குடாநாட்டில் 59 பேர் மிதிவெடியில் சிக்கியுள்ளதாக புள்ளி விபரங்கள் மூலம் அறிய முடிகிறது.

மிதிவெடியில் சிக்கிய 59 பேரில் ஒருவர் உயிரிழந்தும் 18 பேர் காயங்களுக்கு உள்ளாகியும், 40 பேர் ஒவ்வொரு காலினைஇழந்தும் உள்ளனர்.

குறித்த மிதிவெடிச் சம்பவங்கள் பல, அண்மையில் பெரும் யுத்தம் நடந்த தென்மராட்சிப் பகுதியில், அதுவும் மீளக் குடியமர அனுமதிக்கப்படாத இடங்களில் இடம் பெற்றிருப்பதாக சுட்டிக் காட்டபபட்டுள்ளது.

இது தவிர, கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் மே மாதம் வரையான காலப் பகுதியில் மிதிவெடியில் 32 பேர் சிக்கியிருப்பதாகவும், அதன் பின்னர் இற்றை வரையான நாட்களில மீதிப் பேர் மிதிவெடியில் சிக்கியிருப்பதாகவும்,

அண்மைய 3 மாதங்களில் இத்தொகை ஏறு வரிசையில் செல்வதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(உ-10)

## புதிய உறுப்பினர்கள் இணைவு

(புலோலி)

பருத்தித்துறை பிரதேச சபைக்கு ஈழமக்கள் ஜனநாயக கட்சியைச் சேர்ந்த இராஜரட்ணம், யோகராஜா உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

தற்போது பருத்தித்துறை பிரதேசசபையில் தலைவர் உட்பட ஐந்து ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி உறுப்பினர்களும் ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர் ஒருவரும் ரெலோ உறுப்பினர் ஒருவருமாக ஏழு உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

# தென்மராட்சியில் மேலும் 1385 குடும்பங்கள் மீளகுடியமர அனுமதி

(தென்மராட்சி)

தென்மராட்சியில் மேலும் ஆறு கிராம சேவையாளர் பிரிவுகளில் ஆயிரத்து385 குடும்பங்களுக்கு மீள்குடியமர்வதற்கான அனுமதியை பாதுகாப்புப் படையினர் வழங்கியுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

இதன் பிரகாரம் சாவகச்சேரி நகரப்பிரிவில் 280குடும்பங்களும், கோயில்குடியிருப்பில் 382 குடும்பங்களும் சங்கத்தானையில் 77 குடும்பங்களும் ... வில்மத்தியில் 138 குடும்பங்களுக்கும் நுணாவில் மேற்கில் 249குடும்பங்களுக்கும், அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து இக்குடும்பங்கள் சுமார் பதினைந்து மாத இடைவெளியின் பின் முதல் தடவையாக தத்தமது வீடுகளுக்கு சென்று பார்வையிட்டு வந்தனர். அத்துடன் தம்மால் கைவிட்டுவந்த சில பொருட்களையும் மீட்டு வந்துள்ளனர் எனத் தெரிய

பதாம் நாள் தேர்த்திருவிழாவும், பதிதாம் நாள் தீர்த்தத் திருவிழாவும், பதினொராம் நாள் திருக்கல்யாணமும் நடைபெறும். (செ)

## சதுர்த்தி உற்சவம்

(மந்திகை)

அல்வாய் குமிழடி பிள்ளையார் ஆலயத்தில் இன்று காலை 8.00 மணிக்கு சதுர்த்தி உற்சவம் நடைபெறவுள்ளது.

மதியம் அன்னதானமும், இரவு 8.00 மணிக்கு ''கோவலன் கண்ணகி'' நாடகமும் இடம் பெறவுள்ளன. [செ-23]

★ ★ ★

[யாழ்ப்பாணம்]

வண்-வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் ஆவணிச் சதுர்த்தி நிகழ்வுகள் இன்று காலை 10 மணி முதல் இடம் பெறவுள்ளன. அபிஷேகம், சந்தனக் காப்பு சாத்துதல், சகஸ்ரநாம அர்ச்சனையைத் தொடர்ந்து சுவாமி திருவீதி வலம் வருவார். [செ-104]

உடுவில் ஸ்ரீ சொர்ணசித்தி டஞ்சமுக விநாயகர் ஆலயத்தில இன்று விசேட மஹா கணபதி ஹோமம் நடைபெறவுள்ளது.

காலை 7.00 மணிக்கு கணபதி ஹோமமும் 9.30 மணிக்கு கும்பாபிஷேகமும், மதியம் 12.00 மணிக்கு அன்னதானமும், பி.ப. 2.00 மணிக்கு வசந்த மண்டப பூஜையும், பி.ப. 2.30 மணிக்கு திருவூஞ்சல் நிகழ்வுகளும் நடைபெற்று பி.ப 3.30 மணிக்கு விநாயகப் பெருமான் வெளிவீதி உலா வரும் நிகழ்வும் பெறுமிடமும். [செ]

## தொடர் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு உற்சவ காலங்களில் தினமும் மாலை பிரசங்க பூஷணம் நா. சிவசண்முக மூர்த்தி ''விநாயகர் பரத்துவம்'' குறித்து தொடர் சொற்பொழிவாற்றுவார். (செ)

(புலோ.லி)

பருத்தித்துறை பிரதேச சபைக்கு ஈழமக்கள் ஜனநாயக கட்சியைச் சேர்ந்த இராஜரட்ணம், யோகராஜா உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

தற்போது பருத்தித்துறை பிரதேசசபையில் தலைவர் உட்பட ஐந்து ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி உறுப்பினர்களும் ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர் ஒருவரும் ரெலோ உறுப்பினர் ஒருவருமாக ஏழு உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். (உ52)

# மீளகுடியமர அனுமதி

(தென்மராட்சி)

தென்மராட்சியில் மேலும் ஆறு கிராம சேவையாளர்கள் பிரிவுகளில் ஆயிரத்து385 குடும்பங்களுக்கு மீள்குடியமர்வதற்கான அனுமதியை பாதுகாப்புப் படையினர் வழங்கியுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

இதன் பிரகாரம் சாவகச்சேரி நகரப்பிரிவில் 280குடும்பங்களும், கோயில்குடியிருப்பில் 382 குடும்பங்களும் சங்கத்தானையில் 77 குடும்பங்களும், நுணாவில்கிழக்கில் 259 குடும்பங்களும், நுணாவில்மத்தியில் 138 குடும்பங்களுக்கும் நுணாவில் மேற்கில் 249குடும்பங்களுக்கும், அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து இக்குடும்பங்கள் சுமார் பதினைந்து மாத இடைவெளியின் பின் முதல் தடவையாக தத்தமது வீடுகளுக்கு சென்று பார்வையிட்டு வந்தனர். அத்துடன் தம்மால் கைவிட்டுவந்த சில பொருட்களையும் மீட்டு வந்துள்ளனர் எனத் தெரிய வருகின்றது.

இதேவேளை கைதடி பிரதேசத்திலுள்ள ஆறுகிராம சேவையாளர் பிரிவுகளில் இதுவரை ஆயிரத்து760குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளதாகவும் தென்மராட்சி பிரதேசசெயலர் பணிமனையில் இருந்து தெரிய வந்துள்ளது. (உ-77)

# கசிப்பு வைத்திருந்தவருக்கு ஒரு மாத சிறைத் தண்டனை

## யாழ். மேலதிக நீதிவான் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோத கசிப்பு வைத்திருந்தவருக்கு யாழ்மேலதிக நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன தனது தீர்ப்பில் ஒரு மாத கடூழியச் சிறைத்தண்டனையை வழங்கினார்.

சட்டவிரோதமான முறையில் 16 லீற்றர் கசிப்பு வைத்திருந்த குற்றம்சாட்டிதாக்கல் செய்யப்பட்ட வழக்கிலேயே மேற்கண்ட தீர்ப்பு வழங்கப்பட்டது.

இவ்வழக்கின் தீர்ப்பின் போது மூவாயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்தத்தவறியமையை அடுத்தே இத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

புத்தூரைச்சேர்ந்த வேலன் நடராசா என்பவருக்கே இத்தண்டனை விதிக்கப்பட்டது. (க-06)

## காயம்

பனைமரத்தில் ஓலை வெட்டுவதற்காகஏறியவரை குளவி கொட்டியதனால் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துன்னாலை கிழக்கைச் சேர்ந்த கதிர்காமு கமல் (வயது-18) என்பவரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார். (செ-23)

# குடியேற்றஆட்சி அனர்த்தம்

# பிரிட்டனுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

# ஊவா முதல்வர் பகீரதப் பிரயத்தனம்

(கொழும்பு)

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தின்போது ஊவாப் பகுதியில் ஏற்பட்ட அனர்த்தம்தொடர்பாக பிரிட்டனுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக ஊவா முதல்வர் சமரவீர வீரவன்னி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் இச்சம்பவம் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கும் வகையில் வெளிநாட்டுச் சட்டத்தரணிகளின் ஆலோசனை பெறப்பட்டுள்ளதாகவும் சர்வதேச நீதிமன்றிற்கு இவ் விடயம் கொண்டுவருவதற்கான செயற்பாடுகள் கூட முன்னெடுக்கப்படலாம் என்றும் கூறினார்.

இக் காலப் பகுதியில் ஊவாவில் மாத்திரம் சுமார் 20 ஆயிரம் பேர் பிரிட்டிஷ் படைகளால் படுகொலை செய்யப்பட்டுள்ளதாகவும், கடும் வறுமை நிலையில் பலர் வாடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பாக கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், பூரணப்படுத்தப்பட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டதாகவும் மேலும் தெரிவித்துள்ளார். (க)

**மக்களை - - - -**

பொருளாதார வளர்ச்சி நிலையங்கள் மீது புலிகள் நடத்தும் தாக்குதல்கள் காரணமாக எமது பொருளாதாரமே பாதிக்கப்படுகின்றது. இன்று யாழ்ப்பாணத்தில் நீங்கள் அனுபவிக்கும் அமைதியான வாழ்க்கை, சுதந்திரம் போன்றவற்றை பாதுகாக்கும் பொருட்டு தொடர்ந்தும் பாதுகாப்பு படையினருக்கு ஒத்துழைப்பை வழங்கவும். (க)

# யாழ். நகர வீதிகளில் பெருகிவரும் விபச்சாரம்

# முற்றாக ஒடுக்க நடவடிக்கை தேவை

## மாநகர சபையில் அவசரத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரின் பல பகுதிகளிலும் விபச்சாரத் தொழில் மிகவேகமாகப்பரவிவருகிறது: இச்செயல் முறைமுற்றாக ஒழிக்கப்படும் வகையில் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

யாழ். மாநகர சபையில் நேற்று முன் தினம் இடம் பெற்ற மாதாந்தக் கூட்டத்தின் போது மாநகரசபை உறுப்பினர் மங்களநேசனால் மேற்கண்ட பிரேரணை முன் மொழியப்பட்டது.

யாழ். மாநகர முதல்வர் என். ரவிராஜ் தலைமையில் நடைபெற்ற மேற்படிகூட்டத்தில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது;

யாழ். நகரின் குறிப்பிட்ட சில இடங்களான யாழ் ஆஸ்பத்திரி வீதி, ராஜா தியேட்டர் பகுதியை அண்டிய இடங்களில் இவ்வாறு விபச்சாரத் தொழிலில் ஈடுபடும் பெண்களின் நடமாட்டம் அதிகளவில் காணப்படுகிறது.

இவ்வாறு நடமாடும் பெண்கள் பற்றிய விபரங்கள் முழுமையாகக் கண்டறியப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்:

இப் பெண்களுக்கு தகுந்த ஆலோசனைகள் வழங்கிஅவர்களின் ஜீவனோடாயத்திற்கு வழிவகைகள் மேற்கொள்ளப்படவேண்டும்:

மேலும் யாழ்: மாவட்டத்தில் இளைஞர்கள் கட்டுப்பாடற்றவர்களாகதான், தோன்றித்தனமானவர்களாக வாழ்வது மிகவும் வேதனைக்குரிய ஒரு விடயமென யாழ்: மாநகர முதல்வர் என். ரவிராஜ் தெரிவித்தார்.

நடந்து முடிந்த நல்லூர் உற்சவத்தின் போது இப்பகுதி இளைஞர்கள் நடந்துகொண்டவிதம் மனவேதனைகளைத்தரும் நிகழ்வாகும்.

ஆலயத் தொண்டர் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்ட சம்பவமும், கடலை வியாபாரம் செய்த பெண்மணியின் விடயம் சுலபமாகத்தீர்க்கப்பட்டபின்னரும் கூட யாழ். மாநகர சபையின் கட்டுப்பாட்டை மீறி இளைஞர் குழு செய்த அடாவடித்தனங்களும் ஏற்கக் கூடியவையல்ல;

இக்காரணங்களினாலே தான் அடுத்ததிருவிழாக்களில் வீதித் தடைகளில் பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்த வேண்டி ஏற்பட்டது:

எனினும் பூங்காவனத் திருவிழா அன்று இரவு 8-30மணியளவில் கந்தர்மடம் அரசடி வீதிப் பகுதியில் இரு இளைஞர் கோஷ்டிகள் மோதலில் ஈடுபட்டன எனவும் தெரிவித்தார்.

அத்துடன் நல்லூர் உற்சவத்தின் போது படையினர் எவரையும் அப்பகுதியில் நடமாடத் தடை விதிக்கப்பட்டது.

சில இளைஞர் கூட்டம் பெண்கள் மீதும் சிறுமிகள், வயோதிபர்கள் மீதும் நடந்துகொண்ட கட்டுப்பாடற்ற நடவடிக்கையேபொலிஸாரை நாட வேண்டிய கட்டாய நிலையை எமக்கு ஏற்படுத்தியது.

மேலும் வடக்கு-கிழக்கு மாகாண சபையிடம் இருந்து யாழ். மாநகர சபைக்கு தேவையென 660 லட்சம் கேட்கப்பட்ட போதும் இது வரையும் 10 லட்சம் ரூபா தவிர எந்த விதமான நிதி ஒதுக்கீட்டினையும் மாநகர சபைக்கு கொடுக்கவில்லையென்றும் அவர்தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் புளொட் உறுப்பினர் மு. தவநாதனால் சமர்ப்பிக்கப்பட்ட ஏனைய பிரேரணைகளாவன;

1. சமூக கலாசார சீர்கேடுகள் ஒழிப்பு தினம் ஒன்றை பிரகடனப்படுத்த வேண்டும்.

2. கொழும்பில் இருந்து வெளிவரும தமிழ் வார பத்திரிகைகளில் சினிமா பகுதியில் வெளியாகும் ஆபாச, விரசங்களை உணர்த்தும் படங்கள் தடைசெய்யப்பட வேண்டும்.

3. எதிர் காலங்களில் நல்லூர் உற்சவ காலங்களில் தடை நிலைகளிற்கு அப்பால் வியாபார நிலையங்களை அமைக்க நடவடிக்கை எடுத்து பக்தர்களின் சௌகரியங்களை பாதுகாத்தல்.

4. மாநகர சபைக்கு அரசு சார்பாக கிடைக்கும் நிதி ஒதுக்கீட்டில்பாராபட்சம், அக்கறையின்மை ஆகியவற்றை உள்ளூராட்சி அமைச்சின் கவனத்திற்கு கொண்டுவருதல்.

★ கஸ்தூரியார் வீதிப் பகுதியில் கடைகளை அமைக்க நடவடிக்கை எடுத்தல்.

## உணவுப் பொருள் எடுத்துச் செல்வதற்கான தடை தொடர்கிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி என். ஜீவேஸ்வரா இன்று காங்கேசன்துறை கைதிகள் தடுப்பு முகாம் செல்லவுள்ளார்.

அவர் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளுக்கு அவர்களின் உறவினர்கள் கொடுத்துவிடும் கடிதங்களை எடுத்துச் சென்று அவர்களிடம் கையளிப்பார்:

மேலும் கைதிகளினால் அவர்களின் உறவினர்களுக்கு வழங்கப்படும் கடிதங்களைக் கொண்டுவந்து உறவினர்களிடம் கொடுப்பார்:

கடந்த சில வாரங்களாக அங்கு உணவு எடுத்துச்செல்வதற்கு படைத் தரப்பினால் அனுமதி மறுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது: (உ-10)

## இராசி பலன்

(22/8/2001)
(ஆவணி 6, புதன்)
சதுர்த்தி ந.இ 12.07 வரை
அத்தம் மு.இ 11. 54 வரை
ராகுகாலம் - 12.05 - 1.35
நல்ல நேரம் - 4. 35 - 6.05
சித்தம்

**மேடம்**
காரிய ஜெயம், வியாதி குணமடைதல், தொழில் விருத்தி, மனமகிழ்ச்சி.

**இடபம்**
களஸ்திர சுகம், மனச்சஞ்சலம், காரிய இடையூறு, புத்திரரால் கவலை;

**மிதுனம்**
உறவினர் மனஸ்தாபம், ரோகபயம், அற்பர் உறவு, காரியம் கைகூடும்.

**கடகம்**
வாக்கு பலிதம், இனிய அனுபவம், முயற்சி கைகூடும், சகோதரர் உதவி.

**சிங்கம்**
வாக்குக் கலகம், மாகர் [illegible]

## இராவணன் காலத்திலும் பார்க்க

# பொ.ஐ.ஐ.மு. ஆட்சிக்காலத்திலேயே மோசமான விளைவு ஏற்பட்டுள்ளது

## எதிர்க்கட்சித் தலைவர் பரிகாசம்

(கொழும்பு)

'இராவணன் காலத்தில் இலங்கைஎதிர்நோக்கிய பிரச்சினைகளையும் விட தற்போதைய பொதுஜனஐக்கியமுன்னணி அரசின் ஆட்சிக் காலத்திலேயே மிக மோசமான விளைவுகள் ஏற்பட்டுள்ளது'

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சி பற்றி [illegible] பரிகாசம் செய்துள்ளார்.

கொழும்பு தேசிய வர்த்தக சபையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ஐயாயிரம் வருடவரலாற்றில் அதன் துறைமுகங்கள் உலகநாடுகளின் பாவனைக்காக திறந்தே வைக்கப்பட்டிருந்தன [illegible]

அதே போன்று விமான நிலையம் கடந்த 73 வருடங்களாக சர்வதேச விமான சேவைகளுக்காக பயன்படுத்தப் பட்டு வந்தது.

ஆனால் இன்று சகலதும் மாறிவிட்டது. இதுதான் இன்றைய அரசின் ஆட்சி தந்த பரிசு. நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக இன்று [illegible]

## புதிய கட்டடம் அமைப்பு

(புலோலி)

தென் புலோலி அறிவகம் சனசமூக நிலையத்திற்கு சுமார் 5 இலட்சம் ரூபா செலவில் புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் கே. என் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்பின் பேரில் வடமாகாண அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபை இதற்கான நிதியை ஒதுக்கீடு செய்திருந்தது.

இச்சனசமூக நிலைய அடிக்கல் நாட்டும் விழா நிலையத் தலைவர் எஸ் தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது. (உ-52)

## உள்ளூர் உற்பத்திகள் ஊக்குவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் விவசாய உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்குமுகமாக விவசாயிகளுக்கு நன்மை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் அமைச்சர் கே என். டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

அதில் முதல் கட்டமாக, விவசாய உபகரணங்களும், இரு சக்கர உழவு இயந்திர உபகரணங்களும் வழங்குவதற்கு உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (உ)

## இருவரைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் 14 ஆம் திகதி வீட்டில் இருந்து மருந்து எடுப்பதற்காகச்சென்ற சிறுப்பிட்டி மேற்கைச்சேர்ந்த வெள்ளையன் புஷ்பராசா என்பவர் இன்னமும் வீடு திரும்பவில்லை எனவும்,

துன்னாலை மேற்கைச் சேர்ந்த கண்ணன் பாஸ்கரன் (வயது22) என்பவரைகடந்த மாதம் 23 ஆம் திகதி முதல் காணவில்லை எனவும் யாழ். மனிதஉரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, புத்தூர் வாதரவத்தையைச் சேர்ந்த திருநாவுக்கரசு நீதிராசா என்பவரை அவரது வீட்டில் வைத்து கடந்த 19 ஆம் திகதி பின்னிரவு வேளை படையினர் கைது செய்த போதும், கைது தொடர்பான ரசீது எதுவும் வழங்கப்படவில்லை எனவும் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது. (உ-10)

வருத்தம், மனமகிழ்ச்சி.

**இடபம்**

களஸ்திர சுகம், மனச்சஞ்சலம், காரிய இடையூறு, புத்திரரால் கவலை;

**மிதுனம்**

உறவினர் மனஸ்தாபம், ரோகபயம், அற்பர் உறவு, காரியம் கைகூடும்.

**கடகம்**

வாக்கு பலிதம், இனிய அனுபவம், முயற்சி கைகூடும், சகோதரர் உதவி.

**சிங்கம்**

வாக்குக் கலகம், மாதர் நட்பு, வியாதி, அவமானம்.

**கன்னி**

நல்ல முயற்சி, ஜனவசியம், சயன சுகம், போசன சுகம்.

**துலாம்**

பிரயாணம், அரச நன்மை, காரிய அலைச்சல், பொருள் விரயம்.

**விருச்சிகம்**

நினைத்த காரியம் கைகூடும், தெய்வ சிந்தை, குடும்ப சுகம், தனலாபம்.

**தனுசு**

சுப நிகழ்வு, கடினஉழைப்பு, அதிகாரம், காரிய நன்மை.

**மகரம்**

புதிய திட்டம், பிரயாணம், அச்சமான நிலை, உடல் உழைப்பு.

**கும்பம்**

ரோகம், முயற்சி தாமதம், வீண்தொல்லை, போசன சுகம்.

**மீனம்**

பிரயாணம், தனவரவு, அபூர்வ சந்திப்பு, சுவாரஸ்யம்;

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது);

-வளவன்-

# மோசமான விளைவு ஏற்பட்டுள்ளது

## எதிர்க்கட்சித் தலைவர் பரிகாசம்

(கொழும்பு)

'இராவணன் காலத்தில் இலங்கைஎதிர்நோக்கிய பிரச்சினைகளையும் விட தற்போதைய பொதுஜனஐக்கியமுன்னணி அரசின் ஆட்சிக் காலத்திலேயே மிக மோசமான விளைவுகள் ஏற்பட்டுள்ளது'

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சி பற்றி பரிகாசம் செய்துள்ளார்.

கொழும்பு தேசிய வர்த்தக சபையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ஐயாயிரம் வருடவரலாற்றில் அதன் துறைமுகங்கள் உலகநாடுகளின் பாவனைக்காக திறந்தே வைக்கப்பட்டிருந்தன,

அதே போன்று விமான நிலையம் கடந்த 73 வருடங்களாக சர்வதேச விமான சேவைகளுக்காக பயன்படுத்தப் பட்டு வந்தது.

ஆனால் இன்று சகலதும் மாறிவிட்டது. இதுதான் இன்றைய அரசின் ஆட்சி தந்த பரிசு. நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக இன்று அவரே பிரச்சினையின் அங்கமாகிவிட்டார் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார் (செ

### தகவல் தொழில் நுட்ப பூங்காவில்

## செவிப்புலனற்றவர்களுக்கு இலவச கணனிப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

தகவல்தொழில்நுட்பப்பூங்காவில் கணனிகல்விநெறியை இலவசமாக பயில்வதற்கு செவிப்புலனற்ற பத்துப் பேருக்கு வசதி செய்யப் பட்டுள்ளது.

மேலும், வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்கள், அநாதைகள் ஆச்சிரமத்தில் தங்கியிருப்போர். ஊனமுற்றவர்கள் போன்றோருக்கு தகவல் தொழில்நுட்ப பூங்காவில் இலவசமாகப்பயில்வதற்கான புலமைப் பரிசில் வசதி செய்யப்பட்டுள்ளது. (உ)

## முத்திரைகள் வந்தன

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணதபால்நிலையத்திற்கு 500 ரூபா, 1000 ரூபா பெறுமதியான முத்திரைகள் வந்து சேர்ந்துள்ளதாகவும் அவை இன்று முதல் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் யாழ். உப அஞ்சல் அதிபர் தெரிவித்துள்ளார்; (க-7)

### வவுனியாவில் கைது செய்யப்படுவோர்,

# காணாமற் போவோர் தொகை அண்மைக் காலமாக அதிகரிப்பு

## மனித உரிமைகள் ஆணைக்குழு தகவல்

(கொழும்பு)

வவுனியாவில கைது செய்யப்படுவோர், காணாமற் போவோர் தொகை அண்மைக் காலமாக அதிகரித்துள்ளதாக மனித உரிமைகளைப் பேணும் அமைப்புக்கள் கவலை தெரிவித்துள்ளன.

கடந்த 24-ஆம் திகதி பாலமோட்டைப்பகுதிக் குளத்தில் மீன்பிடிக்கச் சென்ற நால்வர் பற்றிய தகவல்கள் இதுவரை கிடைக்கவில்லை என்றும்.

கடந்தவாரம் வவுனியாவில் கைதான இருவர்காணாமற் போயுள்ளதாகவும்இவை குறித்து வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி அலுவலகம் தெரிவித்துள்ளது.

இத்தகைய சம்பவங்கள் வவுனியா மக்களிடையே பெரும் அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(செ)

...என்பவரை கடந்த மாதம் 23 ஆம் திகதி முதல் காணவில்லை எனவும் யாழ். மனிதஉரிமைகள்ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, புத்தூர் வாதரவத்தையைச் சேர்ந்த திருநாவுக்கரசு நீதிராசா என்பவரை அவரது வீட்டில் வைத்து கடந்த 19 ஆம் திகதி பின்னிரவு வேளை படையினர் கைது செய்த போதும், கைது தொடர்பான ரசீது எதுவும் வழங்கப்படவில்லை எனவும் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது. (உ-10)

---

## குழந்தைகள் காப்பகம்

கிராமிய மட்டத்தில் உழைக்கும் பெண்கள் வேலைக்குச் செல்லும் வேளைகளில் குழந்தைகளைப் பராமரிப்பதற்கான குழந்தைகள் காப்பகம் நிறுவுவதற்கான நடவடிக்கையை அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா மேற்கொண்டு வருகிறார்;

அமையவுள்ள குழந்தைகள் காப்பகத்தில் சத்துணவு வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது ;(உ)

---

## கோப்பாயில் கொடுப்பனவு

குடிசன மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபடுவதற்கான பயிற்சி வழங்கும் கருத்தரங்குகளில் கலந்து கொண்டவர்களுக்கான கொடுப்பனவுகள் கோப்பாய்ப் பிரதேச செயலகத்தில் அண்மையில் வழங்கப்பட்டது;

கிராமசேவையாளர் பிரிவு ரீதியாக இவர்கள் தெரிவு செய்யப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது; (க-79)

## இன்று ஒரு தகவல்

# மன்னவனும் கலைஞனும்

பாண்டிய நாட்டில் ஒரு நாள் கோவிலில் ஒரு சிற்பி தூணில் தனது கைத்திறனைக் காண்பித்துக் கொண்டிருந்தான். அப்போது பின்னால் இருந்து கொண்டு சிற்பியின் வேலையாள் சிற்பிக்குத் தாம்பூலம் மடித்துக் கொடுத்துக் கொண்டிருந்தான். அப்போது அப்பக்கம் வந்த பாண்டிய மன்னன் ஏவலாளை ஜாடை காட்டிப் போகச் சொல்லி விட்டு தன் கையிலிருந்த தாம்பூலத்தைச் சிற்பிககுக் கொடுத்தான். சிற்பி வேலையில் ஆழ்ந்தபடியே இடதுகையால் வாங்கிவாயில் போட்டுக் கொண்டே வேலை செய்து கொண்டிருந்தான். ஆனால் இத்தாம்பூலம் அதிக மணத்துடனும், சுவையுடனும் இருந்ததால் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். மன்னனைக் கண்டதும் பயந்து காலில் விழுந்து தாம்பூலம் வாங்கிக் கொண்ட தன் கரத்தை வெட்டிக் கொள்ளப் போனான். மன்னன் அவனை நிறுத்தி 'சிற்பியே! நான் இந்த நாட்டுக்கு மாத்திரமேதான் மன்னன், நீ இந்தக் கலைகளுக்கெல்லாம் மன்னனல்லவா' என்று தட்டிக்கொடுத்து ஆசீர்வதித்துச் சென்றான். அந்நாளில் சிற்பம், ஓவியம், நடனம் மற்றும் கலைகள் வளர்வதற்கெல்லாம் அரசர்களின் ஆசீர்வாதம் நிறைய இருந்ததென்பதை இதனால் அறிந்து கொள்ள வேண்டும்.

ஓவியர் அ. சீனு

# துர்க்கை அம்மன் உற்சவம் பற்றி

# பிர. செயலகத்தில் விசேட கூட்டம்

## முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

(ஏழாலை)

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயஉற்சவம் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியதைத் தொடர்ந்து வலி. வடக்கு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் திருமதி ப. திலகநாயகம் போல் தலைமையில் முக்கிய கூட்டம் ஒன்றுநடைபெற்றது.

அக்கூட்டத்தில்மேற்கொள்ளப்பட்ட முக்கிய தீர்மானங்கள் வருமாறு;

★ ஆலயச்சூழலை தூய்மைப் படுத்த வலி. வடக்கு பிரதேச சபையினரும் சுகாதாரப் பகுதியினரும் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

★ ஆலயச்சூழலில் சைக்கிள் வண்டி பாதுகாப்பு நிலையம் அமைப்பவர்கள் பிரதேச சபையிடம் அனுமதி பெற வேண்டும்.

சைக்கிளுக்கு 2 ரூபாவும், மோட்டார் சைக்கிளுக்கு 3 ரூபாவும் அறவிடப்படவேண்டும்.

★ ஆலயச்சூழலில் உட்புறமாக அமைக்கப்படும் தற்காலிக கடைகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டும்.

★ தொண்டர் சேவையின் வைத்திய உதவிகளை இலங்கை முதலுதவிச்சங்கமும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் வழங்கும்.

★ வட-பிராந்திய போக்குவரத்துச் சபையும், தனியார் சிற்றூர்திச் சேவையும் இணைந்து போக்குவரத்து ஏற்பாடுகளை மேற்கொளளும்.

மாலை 5.30 மணிதொடக்கம், மாலை 6.00 மணிவரை போக்குவரத்துச்சேவை நடைபெறும்.

கடைசிப் போக்குவரத்து பஸ் மாலை 6 00 மணிக்கு யாழ். நகரை நோக்கிப்புறப்படும்;

★ ஆலயச்சூழலில் உள்ள உணவுச்சாலைகள் சுகாதாரக் குழுவினரால் பரிசோதிக்கப்படும்.

★ மின்சாரம் இடையூறு இன்றி வழங்கப்படும்.

★ இலங்கை முதலுதவிச் சங்கம், பரியோவான் முதலுதவிப்படை, சாரணர்படை ஆகிய அமைப்புகள் பக்தர்களுக்கு சிறந்த சேவையை வழங்கும்.

★ ஆலயப் பகுதியில் கடமையாற்ற கிராம அலுவலர்களை நியமிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (க-12)

# கல்விமாணி கற்கைநெறி நேர்முகத்தேர்வு நாளை

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவக கல்விமாணி கற்கை நெறிக்கான ஆசிரியமாணவர்களைத்தேர்ந்தெடுப்பதற்கான நேர்முகப் பரீட்சை நாளை வியாழக்கிழமை காலை 9:30 மணிக்கு மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையில் நடைபெறுமென மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் என். தணிகாசலம்பிள்ளை அறிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்குத் தோற்றத் தகுதியானவர்களுக்கான நேர்முகத்தேர்வுக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், அதில் குறிப்பிடப்பட்ட சகல ஆவணங்களுடனும் சமுகமளிக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இக்கற்கை நெறிக்கான மேலதிக விரிவுரையாளர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகத் தேர்வு இம்மாதம் 25ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறும் எனவும், சம்பந்தப்பட்டவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ- 6)

# யாழ். பல்கலைக்கழகத்தில் புதிய மாணவர் கட்டடம் திறந்துவைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக புதிய மாணவர் கட்டடத் தொகுதி திறப்பு விழா நிகழ்வு நேற்று முன்தினம் காலை 10.00 மணிக்குக் யாழ். பல்கலைக் கழக பதிவாளர் தலைமையில் நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வாக மங்கலவிளக்கேற்றல அனைத்துப்பீடத் துறைத் தலைவர்களினாலும் ஏற்றிவைக்கப்பட்டதனை தொடர்ந்து புதியகட்டடத்தொகுதியாழ். பல்கலைக்கழகதுணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையினால் திறந்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து துணைவேந்தர், மாணவர் ஒன்றியத் தலைவர் ஆகியோர் உரையாற்றினர். இந் நிகழ்வில் அனைத்து பீடத்தை சேர்ந்த மாணவர் பலரும் கலந்து கொண்டனர்.

மேற்படி புதியமாணவர் கட்டடத்தொகுதியானதுஉள்ளக விளையாட்டுக்கள், தேநீர்ச்சாலை என்பவற்றை உள்ளடக்கி இயங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (செ-06)

# ★ வன்னிப் பகுதியில் வீரமுரசு விழா கோலாகலகொண்டாட்டம்

(வவுனியா)

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் 'வீரமுரசு' விழாக்கள் பரவலாகக் கொண்டாடப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வகையில் முல்லைத்தீவு அலம்பில் பகுதியில 'வீரமுரசு' விழா கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் கலந்து கொண்ட அருட்திரு ஜெரட் அமலதாஸ் பேசுகையில்;

இந்தக் கொடிய யுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வரும் வகையில் நாம் அனைவரும் பாடுபட வேண்டியது அவசியம் என்றார். (வ)

## குழாய்க் கிணறு அமைப்பு

[புலோலி]

நெல்லியடி துரையன் தோட்ட ஞானவைரவர் ஆலயத்தில் சுமார் 75 ஆயிரம் ரூபா செலவில்குழாய்க்கிணறு ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கான நிதியை வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கீடு செய்துளளார். [உ-52]

## செய்தியாளர் தாக்கப்பட்டமைக்கு

# யாழ். ஊடகவியலாளர் சங்கம் கண்டனம்

(வடமராட்சி கிழக்கு)

செய்தி சேகரிக்கச் சென்ற ஏ. எப். பி. செய்தியாளர் விமானப் படையினரால் தாக்கப்பட்டமையை யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கம் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக சங்கம் விடுத்துள்ள செய்தியில்,

கடந்த சனியன்று வடபகுதி மீது குண்டுவீச வந்த மிக் 27 ரக குண்டு வீச்சு விமானம் கட்டுநாயக்காப் பகுதியில் வீழ்ந்து நொருங்கியதை அடுத்து அப்பகுதிக்கு செய்தி சேகரிக்கச் சென்ற ஏ. எவ். பி செய்தி நிறுவனத்தைச் சேர்ந்தஉதஜவிஜயசிங்கஎன்ற ஊடகவியலாளர் விமானப் படை அதிகாரிகளால் தாக்கப்பட்டிருக்கிறார்.

செய்தி ஊடகத்தில் பணி புரிவதற்கான அடையாள அட்டையை காண்பித்த பிறகும் அவர் தாக்கப்பட்டிருக்கிறார்.

இது பத்திரிகையாளர்களுககு இந்த நாட்டில் பாதுகாப்பு இல்லை என்பதையே எடுத்துக்காட்டுகிறது.

பத்திரிகையாளர் தாக்கப்படுவதை அரசு தடுத்து நிறுத்த வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. [உ-43]

## முற்றாகச் சேதம்

(உடுவில்)

கடந்த வருடம் தென்மராட்சியில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களினால் சாவகச்சேரி நகர சபையின் கீழ் இயங்கி வந்த 3 நூலகங்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. (உ-129)

## பருத்தித்துறை

# முதலாம் குறுக்கு வீதியை உடனடியாக திருத்தவும்

இராணுவ அதிகாரி வேண்டுகோள்

## மோட்டார்

# கோலாகலகொண்டாட்டம்

(வவுனியா)

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் 'வீரமுரசு' விழாக்கள் பரவலாகக் கொண்டாடப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வகையில் முல்லைத்தீவு அலம்பில் பகுதியில் 'வீரமுரசு' விழா கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் கலந்து கொண்ட அருட்திரு ஜெரட் அமலதாஸ் பேசுகையில்;

இந்தக் கொடிய யுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வரும் வகையில் நாம் அனைவரும் பாடுபட வேண்டியது அவசியம் என்றார். (வ)

## பருத்தித்துறை

# முதலாம் குறுக்கு வீதியை உடனடியாக திருத்தவும்

## இராணுவ அதிகாரி வேண்டுகோள்

(புலோலி)

பருத்தித்துறை பஸ் நிலையத்திலிருந்து துறைமுகத்திற்குச் செல்லும் முதலாம் குறுக்குத் தெருவை உடனடியாகத் திருத்துமாறு பருத்தித்துறை இராணுவப் பொறுப்பதிகாரி நகரசபையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்வீதி புனரமைக்கப்படாமல் இருப்பதால் பருத்தித்துறை துறைமுகத்திற்கு பொருட்களை ஏற்றச் செல்லும்லொறிச் சாரதிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டி உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளையில் இவ் வீதி திருத்தத்திற்கென வடமாகாண அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்புஅதிகார சபை போதிய நிதியை வழங்கவில்லை என பருத்தித்துறை நகர சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பருத்தித்துறை நகர வீதி புனரமைப்புக்கென 58 இலட்ச ரூபாவும், நகர சபைக்கான கட்டடம் மற்றும் பொதுசன நூலக கட்டடம் என்பவற்றிற்காக முதல் கட்டமாக 50 இலட்ச ரூபாவும் வழங்குமாறு வடமாகாண அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையிடம் கேட்டுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-52)

# வடமராட்சியில் கோழித்தீன் தயாரிப்பு தொழிலகம்

வடமராட்சியில் கோழித்தீன்தயாரிப்புக்கான தொழிற்சாலையொன்று விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

வடபகுதி அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக இத்தொழிற்சாலை திறக்கப்படுவதற்காகநடவடிக்கைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டுள்ளார்.

இத் தொழிற்சாலை திறக்கப்படுவதன்மூலம் கோழித்தீனை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளவும், உள்ளூரில் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுக்கவும் முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

ரூபா செலவில்குழாய்க்கிணறு ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கான நிதியை வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கீடு செய்துள்ளார். [உ-52]

## முற்றாகச் சேதம்

(உடுவில்)

கடந்த வருடம் தென்மராட்சியில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களினால் சாவகச்சேரி நகர சபையின் கீழ் இயங்கி வந்த 3 நூலகங்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. (உ-129)

## மோட்டார் சைக்கிள் மீட்பு

(உடுவில்)

அண்மையில் சுதுமலையில் இந்துமத குருபீடாதிபதியின் வீட்டில் இருந்து களவாடப்பட்ட மோட்டார் சைக்கிள் மற்றும் ஒரு தொகுதி பொருட்கள என்பன மீட்கப்பட்டுள்ளன;

களவாடப்பட்ட மோட்டார் சைக்கிளை, தட்டாதெரு சோதனைச் சாவடிப் பகுதியில் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். [உ-129]

## சந்நிதி முருகன் ஆலயத்தில் இன்று

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டுப் பேரவையினால் தினமும் மு.ப. 10.00 மணிக்கு நடத்தப்படும் தெய்வீக கலை நிகழ்ச்சிகளில் இன்று, "மெய்ப் பொருள் நாயனார், என்ற தலைப்பில் சொல்வாருதி இரா. கேதீசனின் சொற்பொழிவு இடம் பெறும்; (செ)

# சங்கம் கண்டனம்

(வடமராட்சி கிழக்கு)

செய்தி சேகரிக்கச் சென்ற ஏ. எப். பி. செய்தியாளர் விமானப் படையினரால் தாக்கப்பட்டமையை யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கம் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக சங்கம் விடுத்துள்ள செய்தியில்,

கடந்த சனியன்று வடபகுதி மீது குண்டுவீச வந்த மிக் 27 ரக குண்டு வீச்சு விமானம் கட்டுநாயக்காப் பகுதியில் வீழ்ந்து நொருங்கியதை அடுத்து அப்பகுதிக்கு செய்தி சேகரிக்கச் சென்ற ஏ. எவ். பி செய்தி நிறுவனத்தைச் சேர்ந்தஉதஜவிஜயசிங்கஎன்ற ஊடகவியலாளர் விமானப் படை அதிகாரிகளால் தாக்கப்பட்டிருக்கிறார்.

செய்தி ஊடகத்தில் பணி புரிவதற்கான அடையாள அட்டையை காண்பித்த பிறகும் அவர் தாக்கப்பட்டிருக்கிறார்.

இது பத்திரிகையாளர்களுககு இந்த நாட்டில் பாதுகாப்பு இல்லை என்பதையே எடுத்துககாட்டுகிறது.

பத்திரிகையாளர் தாக்கப்படுவதை அரசு தடுத்து நிறுத்த வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. [உ-43]

## வன்னி மன்னன் பண்டார வன்னியனின்

# நினைவு தின அனுட்டிப்பு இம்மாதம் 25ஆம் திகதி

## கற்சிலை மடுவில் தீர்மானம்

(வவுனியா)

வன்னி மன்னன் பண்டார வன்னியனின் நினைவு தினம் இம் மாதம் 25ம் திகதி கொண்டாடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது;

வவுனியா கற்சிலை மடுவில் அண்மையில் கல்வியாளர்கள் மற்றும் சமூகவியலாளர்கள் கலந்து கொண்ட கூட்டத்திலேயே மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வழமையில் ஒக்டோபரில் பண்டார வன்னியன் ஆங்கிலேயரிடம் தோல்வியடைந்த நாளை நினைவு தினமாகக் கொண்டாடி வந்ததாகவும் அது பொருத்தமற்றதென்று பண்டாரவன்னியன் ஆங்கிலேயரிடமிருந்து முல்லைதீவைக் கைப்பற்றிய ஆகஸ்ட் 25ஆம் நாளை நினைவு தினமாகக் கொண்டாட வேண்டும்என்று தீர்மானிக்கப்பட்டது.

கற்சிலை மடுவில் பண்டார வன்னியன் பற்றிய நடுகல் இருப்பது குறிப்பிடத்தக்கது; (க-து)

---

## சாரதிகளுக்கு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

வாகன சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்களை பெறவிரும்பும் சாரதிகளை எதிர்வரும் 27ஆம் திகதிமுதல் யாழ். செயலகத்தில்பெற்றுக் கொள்ளுமாறு யாழ் செயலக போக்குவரத்துப் பிரிவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-7)

## விமானதாக்கு

(கொழும்பு)

பளைப்பகுதியில் நேற்றுக் காலை 10. 30 மணியளவில் நான்கு கிபிர் விமானங்கள் குண்டுத்தாக்குதலில் ஈடுபட்டதாக அரச செய்திகள் தெரிவித்தன; (க)

# தமிழகசட்டப் பேரவையில் பெரும் அமளி துமளி

## பரிதிஇளம்வழுதிக்கு இருநாள் தடை

(சென்னை)

தமிழக சட்டப்பேரவையில் கண்ணியமாக நடக்கத் தவறிவிட்டார் எனதெரிவித்து முன்னாள் துணைசபாநாயகர் பரிதி இளம் வழுதி சட்டப்பேரவைத் தலைவரினால் பேரவையிலிருந்து இரண்டு நாட்களுக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளார்;சட்டப்பேரவையில் நேற்றுமுன்தினம் 'பட்ஜெட்' விவாதம் ஆரம்பமானபோதுபரிதிஇளம் வழுதி விவாதத்தை ஆரம்பித்து வைத்துப்பேசினார் அப்போது முதல்வர் ஜெயலலிதா குறுக்கிட்டு அவரது கருத்துக்களை எதிர்த்துப்பேசினார்இதனால் இருவருக்கும் இடையில் கடும் வாய்த்தர்க்கம் மூண்டது;

இதனையடுத்து ஏற்பட்ட கூச்சல் குழப்பத்தின்பின் பரிதி இளம்வழுதி இரண்டு நாட்களுக்கு சட்டப்பேரவையில் இருந்து இடைநிறுத்தப்படுவதாகவும், அவர் தெரிவித்த கருத்துக்கள் அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்படுவதாகவும் சட்டப்பேரவைத் தலைவர் காளிமுத்து அறிவித்தார்.

இதற்கு தி.மு.க உறுப்பினர்கள்கடும் எதிர்ப்புத்தெரிவித்தனர், இந் நடவடிக்கைகளினால் எதிர்க்கட்சித்தலைவர் க; அன்பழகன் அவையை விட்டு வெளியேறினார்.

(ந- 8)

# பொது நலவாய மாநாட்டில் சிம்பாப்பே அதிபர் கலந்துகொள்ளதடைநீக்கம்

(கன்பரா)

எதிர்வரும் ஒக்டோபரில் அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள பொது நலவாய மாநாட்டில் சிம்பாப்பே அதிபர் றொபேட் முகாபே கலந்துகொள்வதைத்தடுக்கும் முயற்சி முற்றுமுழுதாக நிராகரிக்கப்பட்டதாக அவுஸ்திரேலிய செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

அந்நிறுவனம் மேலும் தெரிவிக்கையில்;

இதுவிடயம் தொடர்பாக அவுஸ்திரேலீய பழைமைபாது காப்புக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கொண்டுவந்த இக்கருத்தை ஏற்பாட்டாளர்கள் நிராகரித்துவிட்டனர்.

சிம்பாப்பேயில் கறுப்பின மக்களுக்கு நிலம் வேண்டும் என்ற கோரிக்கைக்கு ஆதரவாக ஜனாதிபதி தொழிற்பட்டார் என்றகாரணத்தால் அவரே அவுஸ்திரேலியாவில்நடைபெற இருக்கும் பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்வதைத் தடைசெய்ய வேண்டும் என்பதே அவரின் வாதமாகும் சிம்பாப்பே அதிபர் முகாபே மாநாட்டில் கலந்து கொள்வது பெரும்பாலும் நிச்சயமாகி விட்டதாகப் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

(து)

# இந்திய தொழில்நுட்ப வல்லுநர்களைபயன்படுத்த அவுஸ்திரேலிய பிரதமர் முடிவு

(சிட்னி)

இந்தியத் தொழில்நுட்ப வல்லுநர்களை தமது நாடு பயன்படுத்தப் போவதாக அவுஸ்திரேலியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

சிட்னியில் அண்மையில் இடம் பெற்ற 'இந்திய2001' தொழில்நுட்பக் கண்காட்சியில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்; மென்பொருள் தொழில்நுட்பத்தையும் மற்றும் தொழில்துறை உற்பத்திகளையும் தான்பார்த்து மகிழ்வதாகவும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; எமது நாட்டிலும் இதுபோன்ற துறைகள் முன்னேற்றமடைய இந்திய தொழில்நுட்ப வல்லுநர்களின்உதவி மிக அவசியம் என்றார்

(து)

# மனிதஉரிமைகளைமீறிய படையினருக்கு மன்னிப்பு

## அமைச்சர் மட்டத்தில் ஆலோசனை

(புதுடில்லி)

மனித உரிமைகளை மீறிய கள் மீது தொடரப்பட்ட வழக்குகள் ஏராளம் குவிந்தி

# இந்தியாவின் சமயசார்பற்ற கொள்கையை வகுப்புவாதம் ஆட்டம் காணச் செய்கிறது

[புதுடில்லி]

இந்தியாவின் சமய சார்பற்ற கொள்கையின் அடித்தளத்தையே, தேசிய ஜனநாயகக்கூட்டணியின் வகுப்புவாதம் ஆட்டம் செய்யவைக்கிறது என்று காங்கிரஸ் கட்சியின்தலைவர்சோனியாகாந்தி குறிப்பிட்டுள்ளார்.

புதுடில்லியில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில்உரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறிய அவர் சமயசார்பின்மை என்ற இந்தியாவின் தத்துவமே தாக்குதலுக்குஉள்ளாகியிருக்கிறது.

சாதிகள்,சமயங்கள் கேலிக்கூத்தாகி விட்டனவென்று மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் ராஜீவ்காந்தியால் கொண்டுவரபபட்ட நவீன கல்வித்திட்டம் அமுல் நடத்தப்படுமோ என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

தேசிய ஜனநாயக அரசு கொண்டுவர எத்தனிக்கும் புதிய கல்விகளால் பழைய பண்பாடுகள் எல்லாம் சீரழிந்துபோகுமோ என்றும் அஞ்சவேண்டியுள்ளது என்று குறிப்பிட்டார்.

(து)

உலக தரிசனம்

# உலகம் முழுவதும் விநாயகர் சதுர்த்தி அனுஷ்டிப்பு தமிழகத்தில் 10 ஆயிரம் சிலைகள்

(சென்னை)

இன்று உலகம்முழுவதும் விநாயகர் சதுர்த்தி விழாக் கொண்டாடப்படுகிறது:

தமிழகத்தில் விநாயகர் சதுர்த்தி விழா ஊர்வலங்களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

10 ஆயிரத்துக்குமேற்பட்ட விநாயகர் சிலைகள் இவ்வாண்டு செய்யப்பட்டு வீதிகளில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

3அடி தொடக்கம் 18 அடி வரை உயரமான விநாயகர் சிலைகள் செய்யப்பட்டிருப்பதாகவும்மக்கள் பக்திசிரத்தையுடன் இந்நிகழ்வை அனுஷ்டித்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சிலைகளை வீடுகளில் வைத்து வழிபாடு செய்யும் படியும் வீதி உலாக்களைக் கட்டுப்படுத்தும்படியும் தமிழக அரசு தெரிவித்துள்ளது;

(து)

# கருணாநிதியுடன் ராமதாஸ் சந்திப்பு இப்போதைக்கு இல்லை

(சென்னை)

தி.மு.க தலைவர் மு.கருணாநிதியுடன் உடனடியாகப் பேசும் எண்ணம் இல்லையென்றும்தேர்தல்வரும் பொழுது பேசிக் கொள்ளலாம் என்றும் பா.ம.க. தலைவர் டாக்டர்ராமதாஸ் தெரிவித்தார்;

நேற்று முன்தினம் சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய ராமதாஸ் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பா.ம.க: ஏற்கனவே புதுடில்லியில் சேர்ந்து விட்டது என்றும் தமிழ் நாட்டில் தேர்தல் வரும் பொழுது தி: மு. க. தலைவர் மு: கருணாநிதியைச் சந்தித்து பேசலாமென்றும் தெரிவித்தார்.

பாட்டாளி மக்கள் கட்சி இறுமாப்புடன் மு. கருணாநிதியைச் சந்திக்கவில்லை என்ற கருத்தை அவர் மறுத்துப் பேசினார்.

(து)

# அமெரிக்க, தென்கொரிய படைவீரர்கள் இணைந்து மாபெரும் போர்ப் பயிற்சி

(சோல்)

அமெரிக்க, தென்கொரிய படைவீரர்கள் இணைந்து மிகப் பெரிய போர்ப் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கொம்பியூட்டர் துணையுடன் நடைபெறும் இந்தப் போர்ப் பயிற்சியில் இரு நாட்டையும் சேர்ந்த 10 ஆயிரம் படை வீரர்கள்பயிற்சிபெற்று வருகின்றனர்;

இப்போர்ப் பயிற்சி வடகொரியாவிற்கும் சீனாவிற்கும் பெரும் அச்சுறுத்தலாக அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

நடைபெறும் இந்தப் போர்ப் பயிற்சியில் கொம்பியூட்டர்களை இரு நாடுகளும் பயன்படுத்துவதால் வடகொரியா ஆத்திரமடைந்திருக்கிறது.

(து)

# விமானநிலையத்தைத்தாக்க திட்டமிட்ட பாக்.நாட்டவர் சுட்டுக் கொலை

(ஸ்ரீ நகர்)

இந்தியாவின் காஷ்மீர் விமானநிலையத்தைத் தாக்கு முயற்சியைத் தாங்கள் முறியடித்து விட்டதாகக் காஷ்மீர்

பயன்படுத்தப் போவதாக அவுஸ்திரேலியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

சிட்னியில் அண்மையில் இடம் பெற்ற 'இந்திய2001' தொழில்நுட்பக் கண்காட்சியில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

...தொழில்துறை உற்பத்திகளையும் தான்பார்த்து மகிழ்வதாகவும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; எமது நாட்டிலும் இதுபோன்ற துறைகள் முன்னேற்றமடைய இந்திய தொழில்நுட்ப வல்லுநர்களின்உதவி மிக அவசியம் என்றார்

(து)

(சோல்)

அமெரிக்க, தென்கொரிய படைவீரர்கள் இணைந்து மிகப் பெரிய போர்ப் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கொம்பியூட்டர் துணையுடன் நடைபெறும் இந்தப் போர்ப் பயிற்சியில் இரு நாட்டையும் சேர்ந்த 10 ஆயிரம் படை வீரர்கள் பயிற்சிபெற்று வருகின்றனர்.

இப்போர்ப் பயிற்சி வடகொரியாவிற்கும் சீனாவிற்கும் பெரும் அச்சுறுத்தலாக அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்ந்து 9 நாட்கள் நடைபெறும் இந்தப் போர்ப் பயிற்சியில் கொம்பியூட்டர்களை இரு நாடுகளும் பயன்படுத்துவதால் வடகொரியா ஆத்திரமடைந்திருக்கிறது.

(து)

...நாட்டில் தேர்தல் வரும் பொழுது தி: மு. க. தலைவர் மு: கருணாநிதியைச் சந்தித்து பேசலாமென்றும் தெரிவித்தார்.

பாட்டாளி மக்கள் கட்சி இராமாப்புன் மு. கருணாநிதியைச் சந்திக்கவில்லை என்ற கருத்தை அவர் மறுத்துப் பேசினார்.

(து)

# மனிதஉரிமைகளைமீறிய படையினருக்கு மன்னிப்பு

## அமைச்சர் மட்டத்தில் ஆலோசனை

(புதுடில்லி)

மனித உரிமைகளை மீறிய படை வீரர்களுக்கு பொது மன்னிப்பு அளிப்பது பற்றி ஆலோசிப்பதாக இந்திய உள்துறை அமைச்சர் எல்.கே.அத்வானி தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்ட அவர், தீவிரவாதிகளை எதிர்த்துப் போராடுகையில் மனித உரிமை மீறல் சம்பவங்களில் படையினர் பலர் ஈடுபட்டிருப்பதாகவும் அவர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகள் ஏராளம் குவிந்திருப்பதாகவும் அவைகள் ஆராயப்படுவதாகவும் மேலும்தெரிவித்தார்.

தேசவடுதலைக்காகப் போராடும் வீரர்கள் மனித உரிமைகளை மீறும் போது அவர்களுக்கு மன்னிப்பு வழங்க வேண்டும் என்று பலதரப்பட்ட நெருக்குதல்கள் இருப்பதால் விரைவில் அது பற்றி முடிவு எடுக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

(து)

# தீவிரவாதிகள் வைத்த கண்ணி வெடியில் சிக்கி 10 பொலிஸார் பலி

(ஹைதராபாத்)

ஆந்திரப் பிரதேசத்தில் தீவிரவாதிகளின்நிலக்கண்ணி வெடியில் சிக்கி 10 பொலிஸார் கொல்லப்பட்டனர் இருவர் படுகாயமடைந்தனர்.

நாலாயிரத்துக்கும் அதிகமான பஞ்சாயத்துகளுக்கு நடந்த தேர்தலைக் கண்காணிக்க ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் ஜீப் பொன்றே நிலக்கண்ணியில் சிக்யது:

நாக்பூரில் இச்சம்பவம் நடைபெற்றதாகவும் ஆந்திர தேச தீவிரவாதிகளே இதற்கு காரணம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. நடந்துகொண்டிருக்கும் ஆந்திர பஞ்சாயத் தேர்தலில் ஆங்காங்கே குழு மோதல்களும் கட்சி மோதல்களும் வன்முறைகளும் இடம் பெற்றுள்ளன.

வன்முறைகளை கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

(து)

# விமானநிலையத்தைத்தாக்க திட்டமிட்ட பாக்.நாட்டவர் சுட்டுக் கொலை

(ஸ்ரீ நகர்)

இந்தியாவின் காஷ்மீர் விமானநிலையத்தைத் தாக்குவதற்கான தீவிர வாதிகளின் முயற்சியைத் தாங்கள் முறியடித்து விட்டதாகக் காஷ்மீர் படையினர்தெரிவித்துள்ளனர்

விமான நிலையத்திலிருந்து நான்கு கிலோ மீற்றர் தொலைவில் தீவிர வாதிகள் இருவரைக் கொன்றதால் இது விடயம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் இருவரும் பாகிஸ்தானியரென்றும், அவர்களிடமிருந்து விமானநிலையத்தாக்குதலுக்குரிய திட்டங்கள் கண்டெடுக்கப்பட்டதாகவும் காஷ்மீர் இராணுவம தெரிவித்தது.

(து)

# தற்கொலை முயற்சிக்கு சட்ட உதவி கோரும் பிரிட்டிஷ் பெண்மணி

(லண்டன்)

பிரிட்டனில் 'மோட்டோ நீரோனி' என்ற நோயினால் பாதிக்கப்பட்ட பெண்மணி ஒருவர்தான் இறப்பதற்குதனது கணவனின்உதவியைப் பெற்றுத்தரும்படி உயர்நீதிமன்றில் சட்ட நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

42 வயதான டயான் பக்றீ என்ற இந்தப் பெண் இரு ஆண்டுகளாக இந்நோயால் பாதிக்கப்பட்டு சுயமாக எதுவும் செய்ய இயலாத நிலைமையில் பெரும் அவஸ்தைப்பட்டுவருகிறார்.

இதனால் தான் தற்கொலை செய்யப் போவதாகவும் அதற்கு தனது கணவன் எந்த விதத்திலும் உதவினால் அவர் மீது நீதிமன்றம் சட்ட நடவடிக்கை எடுக்கக் கூடாதென்று உயர் நீதிமன்றிடம் கேட்டுள்ளார்.

அவர் தனது வழக்கில் மேலும் தெரிவித்திருப்பதாவது;

தனது உயிரை தானே மாய்த்துக் கொள்ள அனுமதி மறுப்பது மனித உரிமையின் சட்டத்திற்கு முரணானதென்றும், மற்றும் மனிதநேயம் அற்றது என்றும் டயான் குறிப்பிட்டுள்ளார்;

டாயானின் இவ்வழக்கிற்கு அவரது உறவினர்கள் மற்றும் வேறும் சில மனித அமைப்புக்கள் ஆதரவு வழங்குவதாகவும் தெரியவருகிறது.

(க-7)

# நேர்முகத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக மருத்துவபீடத்தின் சுகாதார கற்கைகள் அலகிற்கு மருத்துவ ஆய்வு கூட தொழில்நுட்ப வியலாளர், இயன் மருத்துவம், சமூக நலவியல், மருந்தாளர்ஆகியடிப்ளோமா பாட நெறிகளுக்கு விண்ணப்பித்தோருக்கான நேர்முகப்பரீட்சை எதிர் வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு மருத்துவ பீடத்தின் சமூக மருத்துவத் துறையில் நடைபெறும் என சுகாதார கற்கைகள் அலகின் இணைப்பாளர்தெரிவித்தார்; (உ-104

நன்றிக்கு வித்தாகும் நல்
ஒழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்
-குறள்

வலம்புரி

## பாலியல் பிறழ்வு-1

உலகிலுள்ள ஒவ்வொரு இனமும் தனக்குத் தனக்கென ஓர் கலாசார பண்பாட்டு விழுமியங்களைக் கொண்டுவிளங்குகின்றது. அக் கலாசார பண்பாட்டு விழுமியங்கள் ஊடாக அந்தந்த இனத்தின் தரம் மதிப்பீடு செய்யப் படுகிறது. அவ்வகையில்தமிழ் இனத்தின் பண்பாட்டு கலாசார விழுமியங்கள், ஒழுக்கம் என்ற உயரிய தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டே வகுக்கப்பட்டுள்ளது.

அதனிலும் கற்பொழுக்கமென்பது தமிழர்களின் உயிருக்குநேரானது. கற்புநெறி தவறா மாதர்க்கொரு மழை என மும்மாரியில்.ஒன்றை நம் ஆன்றோர்கள் ஒதுக்கி விட்டனரெனில் கற்பின்திறத்திற்கு, அதன்மேன்மைக்கு எத்தனை முக்கியத்துவம் கொடுத்தார்களென்பது வெளிப்படை.

கூட்டுக் குடும்ப வாழ்க்கை கலைந்து தனிக்குடும்ப வாழ்க்கை தோற்றம் பெற்ற போது, வல்லவர்கள் வகுத்து விட்ட உறவு முறைகளும் தளம்பலடையத் தொடங்கி விட்டது.

முன்பெல்லாம் இளம் பிள்ளைகளின் நடத்தைகளை பெற்றோர், ஆசிரியர், நெருங்கிய உறவினர்கள் எனப் பலர் கண்காணித்து வந்தனர். இவர்களுக்கெல்லாம் மேலாக அந்தச் சமூகமே கண்காணிப்பாக - விழிப்பாக இருந்தது.இதனால் தவறு விடக் கூடிய கட்டிளமைப் பருவத்தில் ஏற்படக்கூடிய ஒழுக்கப் பிறழ்வுகள் தடுக்கப்பட்டன.

ஒரு இளைஞனை அல்லது யுவதியை எவரும் நல்வழிப் படுத்தலாமென்ற முறை வழக்கொழிந்து, ஆசிரியர்கள் கூட மாணவர்களை அடித்துத் திருத்தக் கூடாதென்ற சுற்றுநிருபங்கள் வெளியாகிய காலம் இது.

இக் காலத்தில் கந்தறுந்த உளவியல் கருத்துக்கள் காவடி எடுக்கத் தொடங்கியது. ஒவ்வொருவிடயத்தையும் உளவியல் தாக்கங்களோடு ஒப்பிட்டுப் பார்க்க முனைந்த உளவியலாளர்கள் பாலியல் விடயங்களுக்கு சுதந்திரம் வழங்கினர்.பாலியல் கல்வியைவலியுறுத்தினர்.

பாலியல் விடயங்களைத் தவறான பாதைக்குச் செல்ல விடாது தடுப்பதற்காக நம் முன்னோர்கள் பாலியல் கல்வியை தெய்வீகக் கலைகளுடன் இணைத்தனர். பாலியல் கல்வியை ஆலயக் கோபுரங்களிலும், சிற்ப ஓவியங்களிலும் சித்திரித்து எதையும் தெய்வீகத்துடன் நோக்கும் உணர்வைஏற்படுத்தியிருந்தனர்.

# தும்பிக்கைப் பெருமானில் நம்பிக்கை வைத்து

# ஆனந்த வாழ்வு பெற உதவும் ஆவணி சதுர்த்தி

சைவப்புலவர்
சி. நந்தகுமார் B. A (Hons.)
உரும்பிராய்

(இன்று ஆவணிச் சதுர்த்தி தினம்)

ஓங்காரப் பொருளின் அருள் வடிவம்விநாயகப்பெருமான். குறை தீர்த்து வினை தீர்த்து அருள் தரும் ஞான முதல்வன் ஆவர். ஞானத்துக்கும் மோட்சத்துக்கும் தலைவன்.திக்கற்ற எளியவரைக் காப்பவர் கணபதி நல்லாரை அறநெறியில் நடத்துபவர் விநாயகர் எங்களது துக்கத்தைத் தொலைத்து ஆனந்தம் தருபவர்.

விநாயகரைச் சரணடைந்தவர்களுக்கு அழிவில்லை,தொல்லைகள் பறந்து விடும்.

விநாயகப் பெருமானின் நாபி பிரம்ம சொரூபம்,முகம் விஷ்ணுவின் அம்சம், கண்கள் சிவமயம்,இடப்பாகம் சக்தி சொரூபம்,வலப்பாகம் சூரிய சொரூபம் எனக் கணபதி ஸ்துதி கூறுகிறது.

### விநாயக தத்துவம்

யானை முகத்தின்வாயிலாக புகட்டப்படும் விநாயகதத்துவம் முக்கியமானது. ஓம் எனும் எழுத்து பல மொழிகளில் பல பாங்கில் எழுதப்படுகிறது.அத்தனை எழுத்துக்களுக்கும் பொதுவான இயல்பு உண்டு:

யானையின் காது, தலை, துதிக்கை ஆகிய மூன்றும் சேர்ந்து 'ஓம்' என்பதன் பொதுஇயல்பாகின்றது.விநாயகப்பெருமான் ஓங்காரமூர்த்தியாகத் திகழ்கின்றார்;

### ஐங்கரங்கள் உணர்த்துவது

யானைப்பாகன்யானையை வேண்டியவாறு நடத்துவதற்கு தனது கைகளில் அங்குசம், பாசம் என்பவற்றைவைத்திருப்பான் அது போல ஜீவர்களை எல்லாம் நல்ல வழியில் நடத்த விநாயகக்கடவுள் தம் இரு கைகளிலும் அங்குசம், பாசம் என்பவற்றை வைத்திருக்கிறார். விநாயகப்பெருமான் மற்றைய கைகளில் தந்தமும் ஜபமாலையும் வைத்திருக்கிறார்.தனது தந்தங்களில் ஒன்றை ஒடித்து எழுதுகோலாக கணபதி வைத்திருக்கிறார்.கல்வி பயில்வதற்கு அது அறிகுறியாகிறது சிந்தனா சக்தியை வளர்ப்பது அவசியம்என்பதை ஜபமாலை ஞாபகமூட்டுகிறது எண்ணவும்,எழுதவும் கற்றுக்கொண்டவன் நல்ல மனிதன் ஆகிறான்; 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்' என்ற கோட்பாட்டை விநாயகப் பெருமான் எமக்குக் காட்டுகிறார்.அறிவை வளர்க்க விரும்புபவர்கள் விநாயகப்பெருமானை ஆராதிக்க வேண்டும்.

ஐந்தாவது கரமாகிய துதிக்கையில்விநாயகர் 'மோதகம்' என்னும் தின்பண்டத்தை வைத்திருக்கிறார். உணவு இன்றி உயிர் வாழமுடியாது; நல்லுணவை உண்டு உயிர் வாழவும் அறிவைப் பெருக்கவும் நல்வாழ்வு வாழவும் மனிதன் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதை விநாயகப்பெருமானின் ஐந்து கரங்களும் விளக்குகின்றன;

விநாயகவிரதத்தை அனுஷ்டித்து வருபவர்களுக்கு தொடுத்த கருமங்கள் சித்தி பெறும்.இலாபம் உண்டாகும் புத்தி (நல்லறிவு) வளரும். பிள்ளையாரைப் போற்றுகின்ற சிறுவர்கள் ஆற்றலும் அறிவும் பெறுவார்கள்.

### ஆவணிச்சதுர்த்தி

விநாயகப் பெருமானின் சிறப்புக்குரிய விரதமாக ஆவணிச் சதுர்த்தி அமைகிறது. ஆவணி மாதம் சுக்கில பட்சத்து நான்காம் நாள் விநாயக சதுர்த்தி வருகிறது. இந்த நாளில் பிள்ளையாரை உள்ளன்போடு நிறைய தரிசிப்பதன் மூலம் அற்புதகீர்த்தியும் ஆனந்தவாழ்வும் நற்பலன்களும் கிடைக்கும் என்பது கண்கூடாகக் கண்டறிந்த உண்மையாகும்.

### தலைசாய்ந்த விநாயகர்

திருச்சி மாவட்டத்தில் ஓர் ஆற்றங்கரையில் வீற்றிருக்கும் விநாயகர், மறுகரையில் அப்பரும், சம்பந்தரும் பாடிய துதிப்பாடல்கள் ஆற்றோட்டத்தின் வேக ஒலியால் சரிவரக் கேட்காமையால் தலை சாய்ந்து, பாடல்களைக் கூர்ந்து கேட்டமையால் தலை சாய்ந்த பிள்ளையார் என நாமங்கொண்டுள்ளார். அடியவர்களின் துதியை எவ்வளவு உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார் என்பதை இச்சம்பவம் தெளிவாகக் காட்டி நிற்கிறது.

### ஓங்கார ஒலி தரும் விநாயகர்

காஞ்சிபுரம் 'திருவோண காந்தன்தளி' யில் கருவறை மண்டபத்தின் நுழைவாயில் சுவரின் முகப்பில் விநாயகர் திருவுருவம் இருக்கிறது. அவரது அருகில்சென்றுகாதை வைத்துகேட்டால் ஒருவகை ஒலி ஒலிக்கிறது.இதைப் பல்லாண்டு காலமாக பல்லாயிரம் மக்கள் கேட்டு மகிழ்ந்து வியந்துள்ளனர்;

### நிறமாறும் விநாயகர்

கன்னியாகுமரி மாவட்டம் பத்மநாபபுரம் ஊருக்கருகில் கேரளபுரம் என்ற ஊரில் ஆலமரத்தடியில் ஒரு விநாயகர் இருக்கிறார்.இவர்சந்திரகாந்தக் கல்லால் ஆனவர். அந்தக் கல்லின் தன்மை காரணமாக இவர் ஆவணிமாதம் முதல் தை மாதம் முடிய வெண்மையாகவும்,மாசி முதல் ஆடி மாதம் முடிய கறுப்பாகவும் காட்சி தருகிறார்;

### ஜப்பானியரின் பிள்ளையார் வழிபாடு

பிள்ளையார் ஜப்பானியருக்கு பிடித்தமான கடவுள்; பெரும்பாலான ஜப்பான் கோயில்களில் பிள்ளையார் விக்கிரகமும் இருக்கும்; சுகத்தைக்கொடுக்கும் கடவுளாக பிள்ளையாரை அவர்கள் வணங்குகிறார்கள்.

### விநாயகருக்கு உகந்தவை

அறுகம்புல், பால், எருக்கு, வன்னிஇலை,கொன்றை, அப்பம், கொழுக்கட்டை, தேங்காய்,கரும்புவெல்லம், தேன், இளநீர்,எள்ளுருண்டை, பயறுவகைகள்,முக்கனிகள் முதலியவை விநாயகருக்கு விருப்பமானவையாகும்.

வேழமுகத்து விநாயகரை ஆவணிச்சதுர்த்தியில் முறைப்படி பிரார்த்தித்து விருப்பமானதைக்கொடுத்து,எங்களுக்கு பிடித்தமானதை விநாயகப் பெருமானிடம் பெற்று நல்வாழ்வு வாழ்வோமாக. □

# மக்களை படையினரிடமிருந்து பிரிப்பதில் விடுதலைப்புலிகள் தீவிர பிரசாரம்

## யாழ். மாவட்ட கட்டளை அதிகாரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தை மீளக் கைப்பற்றுவோம் எனக்கூறிக் கொண்டு பொதுமக்களை அச்சுறுத்தி பாதுகாப்புப்படையினரிடம் இருந்து பொதுமக்களை வேறுபடுத்தும்வகையில் விடுதலைப்புலிகள் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ். பாதுகாப்பு நடவடிக்கை தலைமையகத்தின் கட்டளை அதிகாரியாக கடந்த 16 ஆம் திகதி பதவியேற்ற மேஜர் ஜெனரல்எஸ்; ரி. கே. விஜேசூரிய யாழ்; குடாநாட்டு பொதுமக்களுக்கு விடுத்த விசேட செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அச்செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது;

யாழ். குடாநாட்டு மக்களை பாதுகாக்கும் பொறுப்பை கடந்த 16 ஆம் திகதி ஏற்றமையை இட்டு நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

விடுதலைப் புலிகளால் ஏற்படக்கூடிய அழிவுகளை தடுத்து நிறுத்துவதற்கு தேவையான சகல திட்டங்களையும் முன்னெடுத்துச் செல்வேன் என்பதனை பொறுப்புடன் தெரிவிக்க விரும்புகின்றேன்.

கடந்த சிலமாதங்களுக்குள் சாதாரண மக்களின் வாழ்க்கைத் தரத்தை சீர்குலைப்பதில் ஈடுபட்டுவந்த விடுதலைப்புலிகள் பற்றிய தகவல்களை நீங்கள் வழங்கியதன்மூலம் புலிகள் இயக்க உறுப்பினர்களை கைதுசெய்ய முடிந்துள்ளது; இதனால் தான் யாழ்; மக்களின் வாழ்க்கை சீர்குலைவில் இருந்து தடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் யாழ்ப்பாணத்துக்கு அருகாமையில் நிலைகொண்டிருந்த விடுதலைப் புலிகளை பாதுகாப்பு படையினர் இன்று குடாநாட்டில்இருந்து விரட்டியடித்துள்ளனர். யாழ்; மக்கள் புலிகள் இயக்கத்திற்கு எதிராகசெயல்படுவதால் இன்று புலிகள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

இதன் காரணமாகத்தான் மீண்டும் யாழ்ப்பாணத்தை மீளக் கைப்பற்றுவோம்என்று கூறிக்கொண்டு பொது மக்களை அச்சுறுத்தி பாதுகாப்பு படையினரிடம் இருந்து மக்களை வேறுபடுத்த புலிகள் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தை கைப்பற்றப் போவதாக இதற்கு முன் எத்தனையோ தடவைகள் புலிகள் பிரசாரம் செய்துள்ளார்கள். புலிகள் இயக்கத் தலைவரின் நிறைவேறாத ஈழம் என்ற கனவை நனவாக்குவதற்கு ஆயிரத்துக்கும் அதிகமான இளைஞர் யுவதிகளை பலி கொடுத்துள்ளமை உங்களுக்கு ஞாபகம் இருக்கும் என நினைக்கின்றேன்.

புலிகள் இயக்கத் தலைவர்களினதும், அவர்களின் குடும்ப உறுப்பினர்களின் சுக போகத்துக்காக உங்களது பிள்ளைகளை பலிகொடுத்து வருவதால் இறுதியில் உங்களுக்கு கிடைக்கப்போகும் விடுதலைதான் என்ன?

யாழ். மக்களே, குடாநாட்டை ஒருபோதும் விடுதலைப்புலிகள் கைப்பற்றுவதற்கு பாதுகாப்பு படையினர் இடமளிக்கப் போவதில்லை என்பதை நம்புங்கள்உங்களையும், இலங்கையையும், பாதுகாப்பதற்குபாதுகாப்புப் படையினர் தமது உயிரையும் மதிக்காது யுத்தத்தில் ஈடுபடுவதை நான் உங்களுக்கு தெரிவிக்கின்றேன்.

அதனால் புலிகளின் தவறான பிரசாரங்களை கேட்டு ஏமாறாமல், புலிகள் கடந்த 20 வருடங்களாக மேற்கொண்டுவரும் பிரசாரங்கள் குறித்து ஆழமாக சிந்தியுங்கள்:

எமது நாட்டில் உள்ள

(3ஆம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்

## அருள் வேட்கை

எள்ளளவும் நின்னைவிட
இல்லா எனை மயக்கில்
தள்ளுதலால் என்ன பலன்
சாற்றாய் பராபரமே.

-தாயுமானவர்-

நீர் வேட்கை பிடித்த மான் நீரின் பொருட்டு அலைவது போன்று இறைவா, நான் உன்பொருட்டு வேட்கை கொண்டிருப்பேனாக;

ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கையில் ஒருவித வேட்கையிருக்கிறது. அதன்பொருட்டு அவன் முயற்சி மிக எடுத்துக் கொள்கிறான் வேட்கைகளுள் எல்லாம் கடவுளுக்காக வென்று உண்டாகும் வேட்கையே ஒப்பு உயர்வு அற்றது;

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

# அரசின் விமானக் குண்டு தாக்குதல் புலிகளுடன் சீண்டும் செயலாகும்

## ரெலோ எம். பி. கண்டனம்

(வவுனியா)

கடந்த ஆறுநாட்களாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் விமானப் படையினர் மேற்கொள்ளும் குண்டுத் தாக்குதல்களை ரெலோ அமைப்பு வன்மையாக கண்டித்துள்ளது.

இது தொடர்பாக அவ் அமைப்பின் தலைவரும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் கண்டன அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அவ்வறிக்கையில் வன்னி பிரதேசங்கள் மற்றும் வடக்கு கிழக்குப்பகுதிகளில் விமானப் படையினர் மேற்கொள்ளும் குண்டு வீச்சுதாக்குதல்களால் அப்பாவிப் பொதுமக்களின் உயிருக்கு உலைவைத்ததுடன் அவர்களின் உடைமைகளும் அழிவுக்குள்ளாகின்றது.

இத்தகைய செயல்களை அரசு மேற்கொள்வது விடுதலைப் புலிகளை வேண்டுமென்றே சீண்டி சினம்கொள்ள வைப்பதற்காகும் என்றும் குறிப்பிட்டார்.

கடந்த 13ம் திகதி விசுவமடுப்பகுதியில் விமானப்படையினர் மேற்கொண்டதாக்குதல்களினால் மாணவர் ஒருவர் பலியானமையை கண்டித்த செல்வம் அடைக்கலநாதன் இத்தகைய கொடூர விமானக்குண்டு வீச்சுக்களை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். [ந-4)

# ஊழல் குற்றம்குறித்து திஸநாயக்காவுக்கு ஜனாதிபதி கடிதம்

(கொழும்பு)

சமுர்த்திவிவகார அமைச்சர் எஸ்.பி திஸநாயக்கா மீது சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விரிவான கடிதம்ஒன்றை ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கா அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அரசாங்கம் சமுர்த்தித்திட்டத்திற்கென ஒதுக்கிய நிதியைக் கையாள்வதில் பல முறைகேடுகள் நிகழ்ந்துள்ளன கட்டாய சேமிப்புக்கென சமுர்த்தியின் பயன் பெறுவோருக்குபெற்றுக்கொடுக்கப் படவேண்டியவட்டி சரியானமுறையில் வழங்கப் படவில்லை இவைஉறுதிப் படுத்தப்பட்டுள்ளன இதனால் சமுர்த்தித் திட்டத்தில் நன்மைபெறும் சுமார் 20லட்சம் குடும்பங்கள் லட்சக்கணக்கானபணத்தை இழந்துள்ளன.

இம்முறைகேடுகள் அனைத்தையும் நிறுத்தி சமுர்த்தி நன்மைபெறுவோரின் உரிமைகளைப் பாதுகாக்க அரசு சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்றும் அக்கடிதத்தில் ஜனாதிபதிசுட்டிக் காட்டியுள்ளார். [ந-8]

இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த

# 2 இலட்சம் பொருட்கள் சுங்க பகுதியால் பறிமுதல்

(சென்னை)

இராமேஸ்வரத்திலிருந்து இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 2 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் இராமேஸ்வரம் சுங்க இலாகா பகுதியினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

வலபாடு கடற்கரைப் பகுதியில் பொருட்கள்கடத்தப்படவிருப்பதாக கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து அங்கு சென்ற சுங்கஇலாகா அதிகாரிகள் இரண்டு இலங்கையர் உட்பட ஆறு பேரைக் கைது செய்துள்ளனர்.

இவர்களிடமிருந்து மூவாயிரம் லீற்றர் எஞ்சின் ஒயில், 500 சைக்கிள் றிம், மோட்டார் உதிரிபாகங்கள் உட்பட மேலும் பல பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (ந-5)

# ஜனாதிபதிக்கு எதிரான குற்றப் பிரேரணை நகல்

## எம்.பிகள் இன்று கையொப்பமிடுவர்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்காவுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியினரால் கொண்டுவரப் படவுள்ள குற்றவியல் பிரேரணையில் ஒன்பது குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்படவுள்ளது.

இக் குற்றச்சாட்டுப் பிரேரணைகள் அடங்கிய நகலில் பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பத்தைப் பெறும் நடவடிக்கை இன்று ஆரம்பிக்கப் படவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் எம். பி. டிரோன் பெர்னண்டோ தெரிவித்துள்ளார்.

குற்றப் பிரேரணைகளின் நகலின் வடிவம் சகல அரசியல் கட்சிகளின் பார்வைக்கும் அனுப்பிவைக்கப் படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

### வறுமை . . .

கொழும்பு நிப்போன் ஹோட்டலில் இடம்பெற்ற இப்பத்திரிகையாளர் மாநாடு நேற்றுக்காலை நடத்தப்பட்டது. இம் மாநாட்டில் சு. ப தமிழ்ச் செல்வனுடனான சந்திப்புத் தொடர்பான வீடியோப் படமும் காண்பிக்கப்பட்டது.

தமிழ்ச்செல்வன் தமிழில் பேசியதை ஜோர்ஜ் சிங்களத்தில் மொழிபெயர்த்தார்.

இது தொடர்பாக ஏ. பி. நாணயக்கார கருத்துத் தெரிவிக்கையில்: தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பின் போது எமது சார்பில் ஒன்பது பேர் கலந்துகொண்டோம். புலிகள் தரப்பில் எஸ். தங்கன், ஜோர்ஜ் தொல்காப்பியன், புலித்தேவன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

விடுதலைப் புலிகள் நான்கு மாதகாலமாக ஒருதலைப் பட்சமான யுத்த நிறுத்தம் செய்தபோதும் அரசு இதற்கான விட்டுக் கொடுப்பைச் செய்யவில்லை. இருந்தும் சமாதானம் பேச்சுவார்த்தை மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு எட்டும் என்றும் தமிழ்ச் செல்வன் எம்மிடம் எடுத்துக் கூறினார் என்றும் ஏ.பி. நாணயக்கார மேலும் தெரிவித்தார். (வ)

# ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்ற ரணில் அழைப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் ஜனநாயக விரோத செயல்களைக் கண்டித்து நாளைவியாழக்கிழமை நடைபெறவுள்ள ஆர்ப்பாட்டத்திற்கு கட்சி பேதங்களை மறந்து மக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென எதிர்க்கட்சித்தலைவர் ரணில்விக்கிரமசிங்கா கேட்டுள்ளார்.

சர்வஜன வாக்கெடுப்பை ரத்துச்செய்தல் பாராளுமன்றத்தைஉடனடியாககூட்டுதல் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கான பொது மக்கள் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இவ் ஆர்ப்பாட்டம் நாளைமாலை 3மணிக்கு கொழும்பு நகர சபைமண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ந-5)

# 400 குடும்பங்கள் வெளியேறின

(அம்பாறை)

அம்பாறை மத்திய முகாம் பொலிஸ் நிலையம் நேற்றிரவு விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டதையடுத்து அம்முகாமைச் சூழவிருந்த 400ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளன.

இவ்வாறு வெளியேறியுள்ள பொதுமக்கள் பாடசாலைகளிலும் பிரதேச செயலகங்களிலும் தங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந- 5)

# வவுனியாவில் ஒருபடைவீரர் பலி

(வவுனியா)

வவுனியா ஓமந்தைப் பகுதியில் விடுதலைப்புலிகள் நடத்திய சினைப்பர் தாக்குதலில் ஒரு இராணுவவீரர் கொல்லப்பட்டுள்ளார்.

ஓமந்தை முன்னணிக்காவலரண் எல்லைப் பகுதியில் உழவுயந்திரத்தில் சென்றுகொண்டிருந்தபோது இத்தாக்குதல் நடைபெற்றுள்ளது. இதன்போது மற்றொரு இராணுவ வீரர் காயமடைந்துள்ளார். (ம)

### சகல

இக்கூட்டத்தில் நாட்டில் நிலவும் அரசியல் பொருளாதார நெருக்கடி தொடர்பாக ஆராயப்பட்டது.

வர்த்தக. சம்மேளன சேட்பேர் கூடத்தில் சம்மேளனத்தலைவர் சந்திர கிபுல்தெனிய தலைமையில் இடம்பெற்ற இக் கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்கா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்றத்தை மக்களின் அங்கீகாரம் இன்றி ஜனாதிபதி சந்திரிகா தன்னிச்சையாக இடைநிறுத்தியுள்ளார் பாராளுமன்றத்தைக் கூட்டாமல் காலம் கடத்துவதனால் சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்து போகும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது. என்றும் ரணில் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

# 9 இளைஞர்கள் சி.ஐ.டியினரால் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மற்றும் விமான நிலையம் மீது விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலையடுத்து ஒன்பது இளைஞர்களை விசேட சி ஐ.டி பொலிசார் கைது செய்துள்ளனர். இவர்களில் எட்டு தமிழ் இளைஞர்களும், ஒரு முஸ்லிம் இளைஞரும் அடங்குவர்.

இவ்இளைஞர்கள் நீர் கொழும்பு மற்றும் வவுனியாவைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் அனைவரும் தற்போது பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ந-4)

### பெருமளவு

ரி.சே.எல்.எம்.ஜி → 2
ஆர்.பி எல் எம் ஜி → 3
ஆர்.டி.எல்.எம் ஜி → 1
40 மில்லி மீற்றர் கைத்துப்பாக்கி → 2
ஏ 3ஏ 3 ரகதுப்பாக்கி → 1
ரி.56 ரக துப்பாக்கி → 26
60 மில்லி மீற்றர் ஷெல் → 40
நடுத்தர ரவைகள் மூவாயிரத்துக்கு மேல். (ம)

### கொழும்பில்

இம் மறியல் போராட்டத்தில் அனைத்து செய்தி ஊடகங்களின் ஊடகவியலாளர்களும், மற்றும் பெருந்திரளான மக்களும் கலந்து கொண்டார்கள்.

ஊடகவியலாளரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும், ஊடகவியலாளர் மீது படையினர் மேற்கொள்ளும் கீழ்த்தரமான தாக்குதலை நிறுத்துமாறும் வலியுறுத்தப் பட்டது. (ந-4)

### 20எம்பிக்கள்

காவுக்குமிடையே கடந்த சில நாட்களாக கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனை அடுத்து ஜனாதிபதியும் அமைச்சரும் வெளிப்படையாவேக ஒருவர்மீது ஒருவர் குற்றம் சுமத்த தொடங்கியுள்ளனர். இது ஆளும் கூட்டணி அரசை மேலும் பல வீனமடையச் செய்யுமென்று கருதப்படுகிறது. (ந-5-4)

### பிரதமர்

இக்கூட்டத்தில் தமிழர்விடுதலைக்கூட்டணி, அகிலஇலங்கைத் தமிழ்க்காங்கிரஸ், ரெலோ, சிறிலங்காமுஸ்லிம்காங்கிரஸ், சிஹலஉறுமய, ஜே.வி.பி ஆகிய கட்சித்தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (வ)

### அம்பாறைப்...

யும் கைப்பற்றியுள்ளனர்.

விடுதலைப்புலிகள் தாக்குதலை ஆரம்பித்தசமயம் முகாமில் இருந்த நாற்றுக்கணக்கான பொலிஸார் தப்பிஓடியுள்ளனர் இவர்களில் 7பொலிஸாரைக் காணவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலின்போது பொலிஸாருக்கும், மல்வத்த, மண்டூர், 13ஆம் கொலணி ஆகிய இராணுவ முகாம்களிலிருந்து உதவிகள் வருவதைத் தடுப்பதற்காக அப்பகுதியை நோக்கி விடுதலைப் புலிகள் சரமாரியான ஷெல் தாக்குதல்களை மேற்கொண்ட வண்ணம் இருந்தனர்.

அம்பாறை மத்தியபொலிஸ் முகாம் பகுதியில் குடியேறியுள்ள சிங்கள மக்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காகவே இந்த முகாம் அமைக்கப் பட்டது.

இது இவ்வாறிருக்க அம்பாறைமத்திய பொலிஸ் நிலையத்தின் மீதான தாக்குதல் அங்கு விரைந்த மேலதிக துருப்புக்களினால் முறியடிக்கப்பட்டதாகவும், தற்போது முகாம் பொலிஸாரின் வசமுள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் சரத்கருணாரட்ன தெரிவித்துள்ளார். (வ-4-7-8)




உங்களது நயம், நம்பிக்கை நாணயமுள்ள, தங்க வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்

**நியூ நகுலா ஜுவல்லறி**

74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**நியூலலிதாஸ் ஜுவல்லறி**

174, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [கி-2195)

**நகுலா நகைமாடம்**

241G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.